ஆண்டு சந்தா ரூ. 7. தனிப் பிரதி அணா 2. சிலோன் 15 சதம் REGD. NO 4642

# திராவிட நாடு

மலர் 11. 16—11—52 இதழ் 20

# முப்பால் முழக்கம்!

[ அரங்கண்ணல் ]

"தமிழ் பாஷையின் அபிவிருத்திக்குப் பாடுபட்டவர்களில் தலைசிறந்த ஒரே ஒருவர் ராஜாஜி. அந்தப் பெருமையில் எனக்கும் பங்கு உண்டு" என்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில், செட்டிநாட்டுச் சீமான் தெரிவித்தாராம். தமிழ் மொழி காத்தவரென ஆச்சாரியாருக்கு விருது அளித்து, அந்தப் பெருமையில் தன்னுடைய பங்கையும் வலியுறுத்தியிருக்கிறார், முத்தையா.

தகவலை நண்பர்கள் தந்தபோது, நகைச்சுவைக்குரிய நல்லதோர் விஷயம் இது, என்றே கருதினேன். வானத்திலே பறக்கும் கல்லூறைக் காட்டி, 'நானும் அதுவுமே கூண்டுக் கிளியைக் காப்பாற்றிய கோமான்கள்' என்று பழந்தின்னி வௌவால் பகர்ந்தால், அது விந்தைதானே!

சந்தர்ப்பத்துக்குச் சாயும் கொள்கைகொண்டோர், பெருமிதமாகச் சொல்லிக்கொள்கிறார்கள் — 'தமிழுக்குப் பாடுபட்டோம்' என்பதாக எப்போதும் அல்ல, இதனைக் கூறுவது! பூமாலை சூடிக்கொள்ளும் சமயம் நேர்ந்தால்!! பொதுமக்களைச் சந்திக்கும் 'துர்ப்பாக்கியம்' ஏற்பட்டுவிட்டால்!!! மூலையில் யாருமறியாவண்ணம், பணப்பெட்டியையும், அதிகாரத் திறவுகோலையும், ஆட்சி இயந்திரத்தைச் சுற்றிவிடும் விசையையும் எப்படியாவது பெற்றிடவேண்டுமென்று, இந்திரஜாலங்களில் ஈடுபடுவதையே குலத்தொழிலாகக்கொண்டோர், தமிழுக்குப் பாடுபட்டதாகக் கூறிக்கொள்கிறார்கள். தமிழுக்குப் பாடுபட்டாராம் ஆச்சாரியார்! இதனைக் கூறுபவர் செட்டிநாட்டு முத்தையா!!

ஆச்சாரியாரையும் தன்னையும் ஒன்றாக்கி, தமிழ்க் காதல் கொண்டோரென, விளம்பரப்படுத்திக் கொள்ளவேண்டிய அவசியம், செட்டிநாட்டரசருக்கு வந்ததைப் பற்றிய உள்ரகசியம் அறிவோம், நாம். பொதுமக்களின் இதயத்தைத் தொடும் விஷயமான 'தாய்மொழிப் பற்று' எமக்கும் உண்டு — அந்தத் தாய்மொழியை வளர்க்க அது செய்தேன், இது செய்தேன் — என்னுடைய சேவையை மதியுங்கள் — என்று வெளியிட்டிருக்கிறார். மகிழ்ச்சி, நமக்கு! செட்டிநாட்டரசர், தமிழைப்பற்றிப் பேசிவிட்டார் என்பதால் அல்ல. தமிழைப்பற்றி பேசினால்தான் தனக்கு மதிப்பு வரும் என்பதைச் சீமான் கும்பல் அறிந்திருக்கிறது என்பதால்.

மகிழ்ச்சி மலரும் இதே நேரத்தில் எவ்விதம் இந்த மாளிகையதிபர்களுக்கு 'தமிழுக்குப் பாடுபட்டோம்' என்று கூறிக்கொள்ளும் துணிவு வந்தது என்பதை எண்ணாமலிருக்கமுடியாது. பத்து லட்சம் செலவுசெய்து, பகட்டான மண்டபம் கட்டி, பகிரங்கமாக சலவைக் கல்லில் தமது பெயரைப் பொறித்து, பட்டாடை உடுத்திய அம்மையார் ஆரத்தி தாங்க, பளபளக்கும் மேனி கொண்டோர் பூரண கும்பம் எடுக்க, சாஸ்திரிகள் சாஸ்திரோக்தமான மந்திரங்களை ஓத, "பாருங்கள், வந்து நிற்கும் கார் வரிசையினை" என்று பலர் மெச்ச, "அச்சா! செட்டியார். படே படே மண்டபம்" "கன்கிராஜுலேஷன்ஸ்" என்று இந்தியும் ஆங்கிலமும் கலந்து பேசி பலர் குலுக்க, கனதனவான்களுக்குத் தன்னிடமிருக்கும் பணப்பெட்டியின் கனத்தையும், பாமரருக்குத் தமக்கிருக்கும் அரசியல் செல்வாக்கையும் காட்டிக்கொள்ளும் 'இசைமண்டபத் திறப்பு விழா' போன்ற காரியங்களால், தமிழுக்குத் தாங்களும் தொண்டுபுரிவதாகக் கூறிக்கொள்கிறார்கள்! மண்டபம் கட்டச் செலவழிந்த தொகைக்கும் 'வருமான வரி கணக்குக்கும்' தொடர்போடு எழும்பிய மாளிகை அது என்பதைப் பிறர் அறியார் எனும் எண்ணம்போலும்! கொஞ்சம் பணம் செலவிடுவது, தூதர்களை நாலு இடங்களுக்கும் அனுப்புவது, காவிரிக்கரையையோ, திருவல்லிக்கேணியையோ தேர்ந்தெடுப்பது, தம் சொல் கேட்கத் தயாரிலிருக்கும் தமிழ் கற்றோர் சிலருக்கு ஓலை மூலம் 'உத்தரவு' அனுப்புவது, ஒரு பந்தல் போடுவது, ஓரிருநாள் கூத்து நடத்துவது, 'பராக்கு' கூறும் பத்திரிகைகளின் உதவியால் படங்களைப் போட்டு, 'பாரீர்! இவர் சேவையை—தாய் மொழியாம் தமிழ்மொழிமேல் இவருக்குள்ள பக்தியே பக்தி' என்று பிறர் மெச்ச நாலு 'கலர்' தலைப்பிட்டு செய்திகளைப் பரப்புவது ஆகிய இத்யாதி காரியங்களைச் செய்துவிட்டு, மக்களிடம் வளர்ந்திருக்கும் தமிழார்வத்துக்குத் தாங்களே 'தர்மகர்த்தாக்கள்' என்று சுட்டிக்காட்டிக்கொள்வது போன்ற காரியங்களில் ஈடுபட்டுவிட்டால், 'தமிழைக் காப்பதாக' மக்கள் கருதிடுவர் எனும் எண்ணம், இச்சீமான்களுக்கு. அதனாலேயே தோள் தட்டிக்கொள்ளுகின்ற துணிவு உண்டாகியிருக்கிறது. 'தமிழ்!' என்று சொல்லி, வீழ்ந்துபட்ட தமிழ் மக்களின் ஆர்வத்தைச் சுரண்டும் அக்கறையோடு, குளத்து நீரைக் காணும் பசித்த குதிரைகள் போல் ஓடிவரும் இந்தக் கனதனவான்களின் 'சேவைப்பெருமையை' மொழிப் போருக்காக நாம் தாலமுத்துவையும் நடராசனையும் தத்தம் செய்த நாள்முதல் அறிவோம். எனினும், ஏதும் பேசவில்லை! அழியும் தாயைக் காக்க, அரும்பையும் ஆளைகொள்ளத் தவித்த காலத்தால். 'தமிழ்த் கோட்டத்துக்குள் பலா புலி வருகிறது!' என்று பலர் உச்சரித்த போதும் "பரவாயில்லை. அது என்ன செய்துவிடும்" என்றோம். தமிழை, அவர்களது பணப்பெட்டி, காலடி பணியச்செய்திட முடியாது—தமிழ் அவர்களை ஜீரணித்துவிடும் என்ற உறுதியான நம்பிக்கை நமக்கிருந்ததால்.

'தமிழ்! தமிழ்!!' என உச்சரித்த மாளிகையதிபர் குழாம், தமிழைக் காக்கத் தடியடியும் சிறைவாசமும் தாங்க நேர்ந்த சமயத்தில், எங்கு ஓடிற்று—பதுங்கிற்று—என்பதைத் தமிழகத்தார் அறிவர்—சாகுமளவும் மறக்கவும் மாட்டார்கள். அத்தகைய 'நெஞ்சுரமும் நேர்மைத்திறமும்' கொண்டோரில் ஒருவரான, சீமான், ஸ்ரீமான் ஆச்சாரியாரைத் 'தமிழ் காத்தவர்' என்று போற்றினாராம். 'தமிழ்காத்த' ஆச்சாரியாரால், உடம்பிலே தழும்புகளையும், குதிரைப்படைகளின் குளம்படிபட்டு மிதியுண்டதால் ஏற்பட்ட காயங்களையும், சென்னைக் கோட்டையருகே சிந்திய குருதியையும், பெற்ற வீரர்கள் இன்னும் மறைந்துவிடவில்லை—உயிரோடிருக்கிறார்கள் எனும் உண்மையையும் மறந்திருக்கிறார் அடையாறு உடையார்!' பணப்பெட்டியையும், பட்டுப்புடவையின் பகட்டையும், அதிகார மோகனாங்கியின் சிரிப்பையும், சதா 'தியானித்து'க்கிடக்கும், மாளிகை அதிபர்கள் பலருக்கும் இந்த மனோபாவம் இருக்கிறது. இதனாலேயே துணிந்து கூறுகிறார்கள் 'தமிழுக்கு தாங்களும் பாடுபடுவதாக. ஆனால் உண்மையில் தமிழுக்காக உயிரையும் தரத் தயங்காத மறவர் கூட்டமோ, இத்தகைய தயாபரர்களைப் பற்றி அலட்சியத்தோடு, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டேயிருக்கிறது—வளர்ந்து கொண்டேயிருக்கிறது. இந்த வளர்ச்சியின் அருமையைத்தான் கடந்த 9ந் தேதி சென்னை ஒற்றவாடையில் நடைபெற்ற திருக்குறள் திருவிழாவில் கண்டோம். கார்களின் தலைமோ, காலி நாற்காலிகளோ, காணமுடியவில்லை, அங்கு. மக்கள் வழிந்தார்கள்! 'வாழ்க தமிழ்' என்ற முழக்கம் எழுந்தது. 'வளர்ப்போம் வள்ளுவம்' என்ற, கீதம் கேட்டோம். "மணியாயிற்று?—கூட்டம் ஏதாவது வந்திருக்கிறதா!" என்று, கைக்கெடிகாரத்தையும் காரழகையும் காட்டிக்கொண்டுவரும் மாளிகை அதிபதிகள் இல்லை! மக்கள் இருந்தார்கள்—அல்ல! அல்ல!! — வழிந்தார்கள். சர்க்காரின் சலுகை ஒற்றவாடை விழாவுக்குக் கிடையாது. ஆனால் சர்க்காரின் எஜமானர்களாம் மக்கள் இருந்தார்கள். சர்க்காரின் கைலாகுபெற்ற 'சாமரம்வீசி'களின் கூட்டமாக இருந்திருந்தால், அதை பற்றி ஒலிபரப்ப 'வானொலி' வந்திருக்கும். ஆனால், மக்களின் இதய ஒலிதான் எங்கும் எதிரொலித்தது! 'வானொலி' யார், வரவில்லை — வரவிடவில்லை, சர்க்கார். மந்தமதி கொண்ட சர்க்கார், நிலவை மறைக்க சிறுகல்லை நிறுத்தியவனைப்போல் நடந்துகொண்டது. எனினும், விழா வெற்றிமுரசு கொட்டிற்று! சீமான்களின் கூட்டமென்றால், சர்க்காரின் இரதகஜபதாதி அத்தனையும் ஓடிவந்திருக்கும். இது பாமரர் கூட்டம் தானே! சீமான்களைத்தாங்க — சரியாகச் சொன்னால் 'களிப்பிக்க' — அவையெல்லாம் தேவை. காரணம், சீமான்களுக்குத் தமிழ்வளர்ச்சிஒரு பொழுதுபோக்கு! நமக்கு, அது உயிரின் வாதையாயிற்றே! அதனால்தான், அகில இந்திய ரேடியோ வரவில்லை, ஒற்றவாடையில்நடைபெற்ற திருக்குறள் விழாவுக்கு எனக் கேட்டதும், சீற்றமும் சினமும், எழுந்தது இதயத்தில். ஆனால், அங்கு, கண்ணெதிரே கண்ட காட்சி, உள்ளத்தில் களிப்பையும் உவகையையும் கொந்தளிக்கச் செய்தது. அவ்வளவு மக்கள் வெள்ளம்! அவர்கள் முகமெல்லாம் மகிழ்ச்சி ஒளி!! இதனைக் கண்டபோது, அன்றோர் நாள், சென்னை 'பிராட்வேயில்' திருக்குறளின் பெயரால் திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தைப் பார்த்து தமிழ்ப் பெரியார் திரு. வி. க. கேட்டாரே, "முன்னர் எல்லாம் திருக்குறள் மாநாடு ஒன்று கூட்டி, பணம் வாங்கிக்கொண்டுதான் உள்ளே விடுவது என்று தொடங்கினால் திருக்குறளின் அருமை பெருமைகளைப் பற்றிய விரிவுரைகளைச் செவி மடுக்கப் பத்துபேர்தான் வருவர். இப்போது, இவ்வளவு பெருங்கூட்டம் கூடியிருக்கும் காட்சி, ஏற்பட்டிருப்பது யாரால்? எவருடைய முயற்சியால்? எந்த இயக்கத்தால்?" என்று. அது, ஞாபகத்துக்கு வந்தது. தமிழ்ப் பெரியார் கேட்டது, உண்மைதானே? தமிழைக் காக்கவும், தமிழினைப் போற்றவும், ஆயிரமாயிரமாக, மக்கள் திரள்வதேன்?—திருக்குறளைப் போற்றவும், முத்தமிழ் முழக்கவும் குடும்பங்குடும்பமாக மக்கள் வெள்

(6-ம் பக்கம் பார்க்க)

## கழக நிதிக்கு ரூ. 1000!

விருதுநகர் நன்கொடை!!

29—10—52 அன்று மாலை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், விருதுநகர் தி. மு. க. கிளையின் சார்பாக, தலைமைக் கழக நிதிக்காக, பொதுச் செயலாளர் சி. என். ஏ. வசம் ரூ. 1000 (ஆயிரம்) பணமுடிப்பு அளிக்கப்பட்டது.

★ கைத்தறித் துணிகளையே கட்டுங்கள் ★

காஞ்சி] 16—11—52 [ஞாயிறு

## ★ அவர் ★

"பூப்போட்ட கிளாசிலே,
போடய்யா, ஒண்ணரை!"

என்று பாடி ஆடும், முதல் நம்பர் குடிகாரன், முச்சந்தியில் நின்று கொண்டு, போவோர் வருவோரைக் கூப்பிட்டு "குடிக்காதீர்கள்! குடி கெடுக்கும் அது" என்று, மதுவிலக்கின் அருமைகளைக் குறித்து முழக்கமிட்டால் என்னவென்று நினைப்பீர்கள்? போதையேறியவன் பிரச்சாரம் செய்வதும், பாஞ்சாலி 'பதிவிரதா' மகிமையைப் புகழ்வதும், கொலைக்கஞ்சாப் பாதகன் சன்மார்க்கசீலம் பேசுவதும், விந்தையான செயல்மட்டுமல்ல; கேலிக்குரியதுங்கூட! இந்த ரகத்துடன் நமது மாட்சிமை தங்கிய முன்னாள் கவர்னர் ஜனரலும், இந்நாள் முதலமைச்சருமான ஆச்சாரியார் அவர்கள், தாமாகவே சேர்ந்துகொண்டிருக்கிறார், என்பதைத் தெரிவிக்க உண்மையில் வருந்துகிறோம். அவர் ஒரு மேதை! அறிவாளி! — உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் பேதைகள் கூட்டத்துக்கு விதிவிலக்கானவர்!—என்றே நினைத்திருந்தோம். நமது நினைப்பை, தகர்த்ததோடன்றி, எல்லோரும் எள்ளி நகைபாடும்படி 6-11-52ந் தேதி, சட்டசபையில் பேசியிருக்கிறார்.

சர்க்கார் நிர்வாகம், ஊழல்கள் மலிந்துள்ளது.

தேவைக்கு மேற்பட்ட அநேக இலாக்காக்களும், உத்யோகங்களும் இருக்கின்றன.

இவை குறைக்கப்படவேண்டும்—அப்போதுதான் நிர்வாகம் திறமையாகும்.

இவ்வண்ணம், நம்போன்றோர் அடிக்கடி வலியுறுத்தி வருகின்றோமல்லவா? அதனையே, தீர்மான ரூபத்தில், உறுப்பினர் ஒருவர் சட்டசபையில் கொண்டுவந்திருக்கிறார். அந்தத் தீர்மானத்தை, எதிர்த்திருக்கிறார், ஆச்சாரியார். இதுகூட நம்மை திகைக்கவைக்கவில்லை! எதிர்க்கட்சிக்காரர் ஒருவர் கொண்டுவந்த தீர்மானத்தை, ஏற்பரா, தேசியத் தோழர்கள்? கவுரவம்தானே, நாட்டுநலனைவிட அவர்கட்குப் பெரிது! ஆகவே, ஆச்சாரியார் எதிர்த்தது, நமக்கு ஆச்சரியத்தை விளைவிக்கவில்லை. ஆனால், அவர், அதை எதிர்த்துப் பேசிய சில வார்த்தைகளை அறியும்போது, சிந்தை குழம்புகிறது—அவரது 'தள்ளாத நிலை'க்காகப் பரிதாபமும் வருகிறது.

"ஒருவருக்கொருவர் பரஸ்பர நம்பிக்கையில்லை, நம் நாட்டில். அதனாலேயே, இன்ஸ்பெக்டர்கள், அவர்களுக்குமேல்சூபர்வைசர்கள் அவர்களுக்கு மேலதிகாரிகள், அதற்கு மேல் அதிகாரிகள் என்று வைத்திருக்கவேண்டியிருக்கிறது. இந்த சங்கடத்தைக் குறைக்க மக்களிடம் ஒருவரையொருவர் நம்ப, ஏதாவது அதிசயம் ஏற்பட்டு மனமாற்றம் உண்டானால் தவிர வேறு வழியில்லை"

என்று செப்பியிருக்கிறார், அவர். நம்பிக்கையில்லையாம்! — அதனால் 10 ரூபாய் செலவிடத் திட்டம் தீட்டினால், அது சரிவர நடைபெறுகிறதாவென்று கண்காணிக்க முப்பது ஆயிரம் ரூபாய்க்கு அதிகாரிகள் வைக்கவேண்டி இருக்கிறது என்கிறார். அவருடைய விளக்கம், விவாதத்துக்குரியது — அது வேறு விஷயம். ஆனால், இத்தகைய விளக்கத்தைத்தந்த அவர் பிறருக்குப் போதனைகள் தந்துள்ளாரே-நொந்த மனத்தவர்போல், அந்தக் கட்டத்தைத்தான், உற்றுநோக்க வேண்டுகிறோம். பிறர்மீது நொந்துகொள்கிறார்! மக்களிடம் நம்பிக்கை மனோபாவம் இல்லையென்று மனவேதனை பட்டுக்கொள்கிறார்.

என்று ஒழியுமோ, இந்த நிலை? என்கிறார். அன்றுதான் நல்வாழ்வு! —என்று ஆயாசப்படுகிறார்.

அந்த மனோபாவம் ஏற்பட வழிகாணோன்; அற்புதம்தான் நிகழவேண்டும்! — என்றும், சிந்தை நொந்துகொள்கிறார்.

ஆச்சாரியார் அவர்கள் இவ்வளவு ஆவலோடு, மக்கள் மனோபாவம் மாறுதலைக்குறித்து மனம்நொந்து கொள்வது, நல்லோர் பாராட்டக்கூடிய செயல்தான்.

அவர் கூறும் காரணம்தான், நிர்வாகத்திறமைக் குறைவுக்குக் காரணம் என்றால், எவரும் அவரது விளக்கத்தை ஏற்க மறுக்கார்.

ஆனால், இவ்வளவுதூரம், மக்களையும் நாட்டினையும் நொந்துகொண்டாரே அன்பர் ஆச்சாரியார், அவரைப்பற்றி நினைக்கும்போதுதான், அவரது சுயரூபமும், அதன்காரணமாகப் பரிதாபமும், தலைப்பிலே தந்த உதாரணங்களும் ஓடிவருகின்றன.

ஒருவருக்கொருவர் நம்பிக்கை ஏற்படவேண்டியது அவசியம்தான்

ஆனால் 'அது இல்லை' என்று நொந்துகொள்ளும் இவரதுநிலைமை என்ன? முதலமைச்சராகப் பதவியேற்ற நாள் முதல், தனது மந்திரிகளில் எவரை இவர் நம்பியிருக்கிறார்? — "நான் பத்திரிகை நிருபர், ஐயா! தங்கள் கல்வி இலாகாவில், ஆரம்ப ஆசிரியர் சம்பளம் உயர்த்தப்படுமா?" என்று கல்வி அமைச்சரைக் கேட்டால், அவர் கூறும் பதில், "எனக்குத் தெரியாது. முதலமைச்சரைக் கேளுங்கள்." "ஏன் முதலமைச்சரைக் கேட்க வேண்டும். தாங்கள்தானே கல்வி அமைச்சர்". "ஆமாம்! பத்திரிகை நிருபர்களைச் சந்தித்து எதுவும் பேசக்கூடாதென்று அவர் கண்டித்துள்ளார்". இவ்விதமே, எல்லா அமைச்சர்களும், பதில் தருகிறார்கள்! நிருபர்கள் கேட்டால் காரணம், அவர்களை அவ்விதம் கண்டித்துள்ளார், முதலமைச்சர். அமைச்சர்களைக் கண்டித்தது மட்டுமல்ல, பத்திரிகா நிருபர்களையும் அழைத்து, "மந்திரிகளிடம் போய் எதுவும் கேட்டு வாயைக் கிளறாதீர்கள்! எது வேண்டுமானாலும், என்னைத்தான் கேட்கவேண்டும்" என்று, உத்திரவும் போட்டுவிட்டார். அதுமுதல், பத்திரிகைகளுக்குப் பேட்டியளிப்பது, இவர்தான். கல்வியிலாகா குறித்தோ, ஸ்தலஸ்தாபனம் சம்பந்தமாகவோ உணவு விஷயம்பற்றியோ, மராமத்திலாகா குறித்தோ, எதைப் பற்றிக் கேள்விகேட்டாலும், முதலமைச்சர்தான் 'ஒலிபெருக்கி'யாகவுள்ளாரே, தவிர, அந்தந்த இலாகா அமைச்சர்களல்ல, பதில்தருவோர்.

இதற்குக் காரணம் கேட்டால், அவர்கள் ஏதாவது முரண்பாடாய் கூறிவிடுவார்களாம்! அவர்கள் அமைச்சர்கள்— அவர்களைத் தேர்ந்தெடுத்து நியமித்ததும்ஆச்சாரியார் தான். ஆனால், அவர்களது திறமை, குறித்து இவருக்கே ஐயம்! ஆகவே தடை!!

இத்தகைய சுபாவம் கொண்டவர், 'நாட்டைப் பார்த்து நொந்து கொள்வதென்றால்' என்னவென்று சொல்வது?—உண்மையாகவா! அல்லது சாகசப்பேச்சா!

கும்பலுக்கு ஆட்களை அமர்த்திக்கொண்டு, அவர்களைப் பொம்மைகள்போல் உட்காரவைத்துக்கொண்டு, எல்லாக் காரியங்களையும் தான் ஒருவனே கவனிக்கவேண்டும் எனக் கருதுவது, சர்வாதிகாரியின் ஆசையாகும். இத்தகைய சர்வாதிகாரிகளில் ஒருவன்தான் முஸோலினி எனும் பாசிஸ வெறியன். ஆச்சாரியாரின் போக்கு முஸோலினியை நினைவூட்டுவதாக 'மெயில்' இதழ் தீட்டுகிறது! அதை, நாம், ஏற்கத்தானே வேண்டும். சுற்றிலும் அமைச்சர்கள்! ஆனால் பொம்மைகள்!!

"கிருஷ்ணாராவ்? எங்கேபோகிறீர்கள். தஞ்சைக்கா! அங்கே, கம்யூனிஸ்டுகளைபற்றிப் பேசுங்கள்"

"சுப்ரமணியம்! டில்லிக்குப் போய்வந்ததை பத்திரிகைக்காரர்களுக்கு நீ, சொல்லவேண்டாம். நான் பார்த்துக்கொள்கிறேன்"

"மாணிக்கவேல் — வடஆற்காடு விஷயமாக அதிகம் பேசாதே!"

இவ்விதம், ஒவ்வொருவருக்கும் தாக்கீதும், அவர்களை அனுமதித்தால், இது வந்துவிடுமோ? அப்படி எதிர்ப்பு வருமோ?' அதைப் பேசிவிடுவார்களோ? இவ்விசம் திசை மாறிவிடுமோ? என்கிற அச்சத்தையும் ஐயத்தையும் வைத்துக்கொண்டு, அதே நேரத்தில் நாட்டுக்கு நீதி போதனையும் செய்கிறார். அவரைச் சுற்றியிருப்போர் அமைச்சர்கள்! அடிக்கடி கலந்து பேசுபவர்கள்!! அவர்களையே நம்பாத இவர், "இவ்வளவு உத்யோகங்கள் ஏன்?" என்று கேட்கும் எதிர்க்கட்சியினருக்கு, "நாட்டில் நம்பும் மனோபாவம் இல்லையே" என்று கண்ணீர் வடிக்கிறார். கேலிக்குரிய காட்சி! 'போதை ஏறியவன், மதுவிலக்கைப் பற்றிப் பேசுவதா?' — என்பீர்கள். ஆச்சாரியார், இவ்விதம் பேசுவதேன்? அவரை, அந்த ரகத்துடன் ஒப்பிடவே, மனங்கூசும். ஆனால், இவ்விதம் பேசுவதேன்! ஆதிக்க வெறியா! அல்லது எது சொன்னாலும் நாட்டினர் நம்புவர் எனும் எண்ணமா!!

★

### விருதுநகரில் சி. என். ஏ.

29—11—52 அன்று காலை விருதுநகர் தோழர் கே. எஸ் எஸ். அய்யாச்சாமி அவர்களின் திருமகளார் வாழ்க்கை ஒப்பந்தத்தில் சி. என். ஏ. கலந்துகொண்டார். மேற்படி விழாவில் தோழர் வி. வி. ராமசாமி M. L. A. தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, இரா. சு. தங்கப்பழம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

நண்பகல், வார்டு கிளைக்கழகத் திறப்பு விழாவிலும், பிறகு நடைபெற்ற ஊழியர்கள் கூட்டத்திலும், பொதுச் செயலாளர் அண்ணாதுரை கலந்துகொண்டார்.

மாலையில் செந்திக்குமார நாடார் கல்லூரித் தமிழ் மன்றத்தில் சொற்பொழிவாற்றினார்.

பிறகு, நகரசபைத் தலைவர் தோழர் எம். எஸ். பெரியசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாபெரும் தி. மு. க. பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஆசைத்தம்பி, எம். எஸ். ராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றியபின்னர், பொதுச் செயலாளரிடம் ரூ 1000 கொண்ட பணமுடிப்பு விருதுநகர் கிளைக்கழகத்தாரால், தலைமைக்கழக நிதிக்காக அளிக்கப்பட்டது. அதை பெற்றுக்கொண்டு சி. என். ஏ. தற்கால அரசியல் நிலைகுறித்துப் பேசினார்.

### நீத்தார் நினைவுநாள்

அன்புடையீர்!

சென்ற 5—11—52 அன்று மாலை 6-மணிக்கு எனது தந்தையார் திரு. வீ ராமகிருட்டினனார் அவர்கள் இயற்கை யெய்தியதை முன்னிட்டு வரும் 20—11—52 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சிதம்பரம் 22, புதுப்பேட்டை பிள்ளையார் கோவில்தெருவிலுள்ள எனது இல்லத்தில் நீத்தார் நினைவும், தந்தையார் படத்திறப்பும் நடைபெறும்.

தில்லை-வில்லாளன்

# தி. மு. க. மாவட்டக் கிளை தேர்தல்கள்

கீழ்க்கண்ட மாவட்டக் கிளைகளின் தேர்தல்கள் கீழ்க்கண்ட விபரப்படி நடைபெறும். தலைமை நிலையத்தில் பதிவு செய்துகொண்ட கிளைகளுக்குப் 'பிரதிநிதி உரிமைச் சீட்டு' தலைமை நிலையத்திலிருந்து அனுப்பிவைக்கப்பெறும். கிளைக் கழகப் பிரதிநிதிகள், உரிமைச் சீட்டோடுப்பாக்கியுள்ள ரசீதுகளையும், பாக்கியுள்ள சந்தா தொகையையும் உடன் எடுத்துக்கொண்டு சென்று மாவட்டக் கழகத் தேர்தலில் கலந்துகொள்ள வேண்டும்.

| மாவட்டம் | தேர்தல் நாள் | இடம் | மணி | தேர்தல் அதிகாரி |
|---|---|---|---|---|
| தஞ்சை | 16—11—52 | அருளானந்தசாமி நாடார் தோட்டம், தஞ்சை. | மாலை 3 மணி | சி. பி. சிற்றரசு |
| செங்கற்பட்டு | 23—11—52 | 'திராவிடநாடு' நிலையம், காஞ்சிபுரம் | மாலை 3 மணி | சி. டி. டி. அரசு |
| வட ஆற்காடு | 23—11—52 | 'டவுன் ஹால்', வேலூர் | மாலை 2 மணி | கே. ஏ. மதியழகன் |
| தென் ஆற்காடு | 23—11—52 | தி. மு. க. கட்டிடம், கடலூர் O.T. | மாலை 3 மணி | இரே. இளம்வழுதி |
| கோவை | 23—11—52 | கழகக் கட்டிடம், தெப்பக்குளம் வீதி, கோவை | மாலை 3 மணி | ட. கண்ணன் |

குறிப்பு:—சிற்றூர்க் கிளைகள் ஒருவரைத்தான் மாவட்டப் பிரதிநிதியாக அனுப்பவேண்டும். நகர்க் கிளைகள் இருபதினாயிரம் மக்களுக்கு ஒருவர் வீதம் அனுப்பவேண்டும்.

இரா. நெடுஞ்செழியன்,
பொறுப்பாளர், தலைமை நிலையம்.

# ரொட்டித் துண்டு

"பாபாத்மாக்கள்தான் பரமனைத் தூஷிப்பார்கள். பரமண்டலத்துப் பிதா, பாபிகளைத் தண்டிக்காமல் விடார். பழிக்காதீர்கள்! அரசு அன்றே கொல்லும் — தெய்வம் நின்று கொல்லும் என்பதை மறந்து விடக்கூடாது. ராஜ்யம் ஆளும் பொறுப்பு வந்துவிட்டதென்பதால் தெய்வத்தை இகழாதீர்கள்! க்ஷீணித்துப் போய்விடுவீர்கள்!!"

"குருமார்களே! கும்பிடுகிறோம், உண்ணச் சோறின்றி, உலரும் மனிதனைக் காப்பாற்ற, முயல்வதற்குப் பெயர் தெய்வநிந்தனையா! அவனுக்கான வாழ்க்கை வழிகளைச் சொல்லிக்கொடுப்பதற்குத் தாங்கள் இடும் பெயர் தூஷிப்பதா?"

"மரம்வைத்தவன் தண்ணீர் ஊற்றுமலா, போய்விடுவான்? மக்கள் யாவரும் மகேசுவரன் குழந்தைகள்தானே! கடவுளுக்கு அக்கரையில்லாததுபோலவும், நீங்கள்தான் அவர்களுக்கு வாழ வழிசெய்துதருவோர்போலவும், ஏன் இப்படி நடிக்கிறீர்கள் — பொதுவாழ்வு என்கிற போலித்திரையோடு."

"மரம் வைத்தவன், மக்களில் ஏன் பேதங்களை உண்டாக்கினான் சுவாமி?"

"அது அவரவர்கள் முன் வினைப் பயன். தன் வினை தன்னைச்சுடும் — ஒட்டப்பம் வீட்டைச்சுடும். தெரியுமோ?"

'உலகத்தின் ஆதிகர்த்தா, அவர். அப்படியென்றால் அவரவர் முன் வினைக்கு யார் காரணம்? ஐயன் தானே, அண்ட சராசரங்களையும் ஆட்டிப்படைப்பவர்"

"இப்படிப் பேசுவது, உமக்கு, கடவுள்மீது நம்பிக்கையில்லையென்பதை பிரகாசமாகக் காட்டுகிறது."

"பாதை தவறாதீர், பாதிரிமாரே! நான் கேட்பதற்கு பதில் கூறுங்கள். பட்டாடை, படாடோபம், பாத காணிக்கை இவ்வளவோடு, பரிமள கந்தம் வீச, பகவானின் தூதர்கள் எனும் திருநாமத்தோடு உலவுகிறீர்களே, நீங்கள் என்றாவது உங்கள் தேசத்தின் முன்னேற்றத்துக்கு உழைத்ததுண்டா? துரும்பளவாவது தொண்டுசெய்ததுண்டா!":

"தெய்வம்தான் எமக்கு முக்கியம்; தேசமல்ல!"

வரிசை வரிசையாக நிறுத்தப்பட்டிருந்த மத குருமார்களை நோக்கி, அந்த மாவீரன், இத்தகைய கேள்விகளைக் கேட்டான். மகாபாபி! நீசன்! நிரீசுவரவாதி! கடவுள் துவேஷி! — இத்தகைய பட்டங்களால் அலங்கரிக்கப்பட்டவன், அந்த மாவீரன். இத்தனை அம்புகளும், அவனை எதுவும் செய்யவில்லை — செய்யவும் முடியாது. அந்தளவுக்கு வளர்ந்துபோன கொள்கைகளின் தலைவன், அவன்! மக்களின் தலைவன்!! அவனைப் பார்த்து மாதா கோயில்களின் 'பிதா'க்களென்போர் சீறினர். மக்களின் தலைவன், 'தொண்டனா'கயிருந்த காலத்தில், அவனை அழித்து ஒழித்துவிட, அரசாங்கத்தைத் தூண்டியும், அடியாட்களை ஏவிவிட்டும், எத்தனையோவித முயற்சிகளில் ஈடுபட்டவர்கள்தாம், அந்த மத குருக்கள். ஆனால், இவை யாவையும் தூளாக்கிவிட்டு, சுதந்திரகீதம் எழுப்புகிறான், அந்த மாவீரன்! விரலசைத்தால் போதும், தன்னைச் சித்திரவதைசெய்த 'சிறு புத்திக்காரர்கள்'மீது, பாய படை வீரர்கள் இருக்கின்றனர் — அவன்தான் இன்று, தலைவன்! மக்களையும் நாட்டையும் நல்லபாதைக்கு அழைத்துச்செல்லும் தலைவன்!! — அதனால், அவன், மதக்குருக்களையெல்லாம் அழைத்து, மேற்கூறிய வண்ணம் விவாதித்தான். கமண்டலம், ஜபமாலை, வேத புத்தகம் — இவைகளைக் காட்டினரே தவிர, விவாதிக்கவில்லை அந்த வேதம் ஓதிகள். புதுவாழ்வு கண்ட அந்த மாவீரன் அவர்களைக் கேட்டான்.

'வீணா வளர்த்தாதீர்கள்! கடவுள் பெயரைச் சொல்லி நீங்கள் கொள்ளையடிப்பதாகக் கூறுகிறேன். உண்மையில், கடவுள் உண்டென்பதும், அவர் உங்களுக்கு அடிக்கடி தாக்கீது அனுப்புகிறாரென்பதும், உண்மையா? உண்மையானால், எனக்கு விளக்கி காட்டவேண்டியது, உங்கள் கடமை"

"இப்படிப் பேசாதீர். கடவுளை நிந்திக்கிறீர். இவ்விதம் நிரீசுரவாதம் பேசினால், நீங்களும் உங்கள் அரசாங்கமும் ஒரு வாரத்திற்குள் தேவனின் கோபாக்கினியால் எரிந்து சாம்பலாய் விடுவீர்கள். தெய்வ நிந்தனை சும்மாவிடாது! தேவதூதர்களாம் எமது சாபம் உடனே பலிக்கும்!!"

"சந்தேகம் வேறு உண்டோ! நிச்சயம் சாம்பலாகிவிடுவீர்கள்"

பாதிரிமார் வார்த்தையைசூழ்ந்து நின்ற மக்களிடம் தெரிவித்தான் அந்த மாவீரன். "மக்களே! இப்பாதிரி கூறியதைக் நீங்கள் கேட்டீர்கள். ஒரு வாரத்துக்குள் நாம் ஒழிந்துவிடுவோமாம். பாமரர்களுக்குப் பசி தீர்ந்தபின்புதான் பக்தியும், கடவுளும் என்பதே என் கருத்து. பசி, பக்தியைப் பறக்கடித்துவிடும் என்பது என் சித்தாந்தம்."

இதைக் கேட்ட பாதிரிகளில் ஒருவர்,

"பக்தி, பசிக்கு அடிபணியாது. பரமண்டலத்துப் பிதாவின் ஆவி எங்களைக் காப்பாற்றும்" என்றார். "நானும் அதைத்தான் சோதிக்க விரும்புகிறேன்" என்று அந்த மாவீரன் கூறினான். ஏனைய மதக் குருக்கள், முகம் சுளித்தனர்! எனினும், வேறுவழியின்றி சவாலை ஏற்கவேண்டியவராயினர். அந்த மத குருக்களை, மக்களுக்கு அறிமுகம் செய்துவைத்தான், அந்த மாவீரன். "தோழர்களே! இவர்களை நீங்கள் அறிவீர்கள். நமது மாதா கோவில்களின் குருமார்கள் இவர்கள். கர்த்தரின் கருணைக்குப் பாத்திரமானவர்களென்பதாகச் சொல்லிக்கொண்டிருப்பவர்கள். இவர்கள் பக்தி முக்கியம் என்கின்றனர். நான் பசிதான்! என்றேன். எனவே, எமக்குள் 'ஓர் பந்தயம்' என்று, விளக்கினான். "இவர்கள் சாபப்படி நாம் அழிந்து எரிந்து போகாமலிருந்தால் மீண்டும் சந்திப்போம்" என்று கூறிவிட்டு, பந்தயத்திலீடுபட்ட மத குருமார் நால்வரையும் அழைத்துக்கொண்டு, மாதாகோவிலுக்குச் சென்று, எட்டு நாள்வரையில் இவர்களுக்கு உணவு கொடுக்கக்கூடாது அடைத்து பட்டினி போடுங்கள் என்று உத்தரவிட்டான்.

ஒரு நாள்..........இரண்டு நாள்......பாதிரிகள் நால்வரும் மண்டியிட்டு பிதாவைத் துதித்தனர்! வயிறு கிண்டும்போதெல்லாம், இத்தகைய பக்தியில் சிந்தையைச் செலுத்த முயன்றனர். பசிதான், முன்னின்றது! தாங்கமுடியவில்லை. வீம்புடன் நான்கு நாட்கள் ஓடிவிட்டன. பந்தயத்திலீடுபட்ட அந்நால்வரையும், ஜன்னல்கள் வழியாக வேடிக்கை பார்த்தது, மக்கள் கூட்டம். பசி, கிள்ளக் கிள்ள, வேடிக்கை பார்க்கும் மக்களை நோக்கிச் சீறினர் நால்வரும். 'ஜனங்களே! எங்களைத் திறந்துவிடுங்கள். நீங்கள் அழிவீர்கள். கடவுள் கூறுகிறார்" என்று, அலறினர். பசி அதிகரிக்க, அதிகரிக்க, இந்தக் கூக்குரலும் உரத்துக் கேட்க ஆரம்பித்தது. எவரும், தலைவனிடம் செல்லவில்லை! ஐந்தாவது நாள். ஒரே கூச்சல்! அமுகையம்! அமர்க்களம்!! எட்டாவதுநாளும் வந்தது "பரமண்டலத்துப் பிதாவின் அருளால் பசியின்றிவாழ்வோம்" என்று சவால்விட்ட மதக் குருமார்களைக்காண, மக்களும், மாவீரனும் சென்றனர். மாதா கோவிலின் அறைக்கதவைத் திறந்தனர். பார்த்தால், பாதிரிமார் அனைவரும், ஒருவரோடொருவராய்ச் சுருண்டுகிடந்தனர். பரிதாபமாக இருந்தது, இந்தக் காட்சி! கதவை மூடிவிட்டு, ஜன்னலண்டைவந்தான், மக்களின் தலைவன். மக்களைச் சுற்றுமுற்றும் பார்த்தான். ஆவலோடு நடக்கப்போவதை, எதிர் பார்த்த வண்ணம் இருந்தார்கள், அவர்கள். "பாதிரிமார்களே! இங்கே, பாருங்கள்" என்று, அழைத்தான். அவன் குரல் கேட்டு, சுருண்டுகிடந்த, நால்வரும் பசிதாண்டவமாடும் கண்களோடு குரல் வந்ததிக்கை நோக்கினர். அங்கே, அவர்களோடு பந்தயம் கட்டின, மாவீரன் ஜன்னல் வழியாக ரொட்டித்துண்டு ஒன்றைக் காட்டிக்கொண்டிருந்தான்! பரபரப்போடு, தள்ளி எழ முயற்சித்தனர் — பரமண்டலத்துப் பக்தர்கள். வீசினான், அந்த ரொட்டித் துண்டை!

"வேதபுத்தகம்போதும் — விசாரம் ஏது?" என்று போதிக்கும் குருமார்களிடை, உடனே. பெருத்த அடிதடி! கூச்சல்!! மாதாகோவிலின் மணியடித்து பாமரர்கட்குப் பக்திப் பாதையைக்காட்டும், மத குருமார், ஒரு ரொட்டித் துண்டுக்காக, சண்டையிட்டுக் கொண்டனர். அவர்களில் வலிவுள்ள ஒரு பாதிரி, மற்ற மூவரையும் தள்ளிவிட்டு, தான் மட்டும் ரொட்டித்துண்டை ருசித்தார். மக்கள் இதைக்கண்டு சிரித்தனர்! பாதிரிமார் நால்வரையும், மக்கள் மன்றத்துக்கு அழைத்து வந்து, அம்மாவீரன் கேட்டான். "பக்த சிகாமணிகளே! இப்போது சொல்லுங்கள். பசிபெரிதா! பக்திமார்க்கமா?" பரமண்டலத்தையும், கமண்டலத்தையும் காட்டி வசித்து வந்த, அந்த குருக்கள்மார் மூவரும், "பசிதான் பெரிது! பசிக்குமிஞ்சி எதுவுமில்லை. பசிக்கிறது எமக்கு. கொஞ்சம் சாப்பாடு போடுங்கள்" என்று அலறினர். உரத்துச் சிரித்தான், மாவீரன்! மக்கள் கைகொட்டி நகைத்தனர்!! சம்பவம், ரஷ்யாவில், நவ. 7க்குப்பின் நடைபெற்றது. மாவீரன் லெனின்தான், மதகுருமார்களைப் பந்தயத்துக்கு அழைத்தவர்.

★

## "சில்லரைச் சாமிகள்"

ஊசிக்காட்டான்
வண்டிமலையன்
வைரவநாதன்
சின்னப்பலவேசம்
பெரியபலவேசம்
இடும்பன்
காலன்
முண்டன்
அக்கினிமாடன்
வண்ணாரமாடன்
கழுமாடன்
பிச்சைகாலன்
மாசனம்
புலமாடன்
ஒத்தபந்தக்காரன்
சல்லடமாடன்
நீலன்:
தூங்கிப்பேய்

*

கருநீலி
சாந்தக்காரி
பாதாள இசக்கி
பன்னீர்பாக கொண்டைக்காரி
யானைக்காரி
வாணக்காரி
கோட்டிக்காரி
சங்குப்பிள்ளை
தன்னைப்பெத்தாள்
பளவூர்இசக்கி
பீத்தகளவுக்காரி
மூக்குவச்சஇசக்கு
வாணிச்சிஇசக்கி
மஞ்சணக்காரி
அரிசிபிள்ளை
கன்னி
வண்ணாரமாடி
மேலங்கோட்டுஇசக்கி

*

மேலே தந்திருப்பது ஆண்கள்! கீழே தந்திருப்பது பெண்கள்!! — இவ்விதம், ஒரு பெயர்ப் பட்டியலை. கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்பு, தென் திருவிதாங்கூரைச் சேர்ந்த தோழர் ஒருவர் நமக்கு அனுப்பி வைத்திருந்தார். இந்தப் பெயர்களைப் படிக்கும்போது வேடிக்கையாகவும் விந்தையாகவும் தோன்றுகின்றதல்லவா? இவ்வளவு பெயர் மண்ணைக் கொண்டு சிருஷ்டிக்கப்பட்டு, தென் திருவிதாங்கூரில் அங்கங்கே வீற்றிருக்கும் சில்லரைத் தெய்வங்கள். இந்த சில்லரைச்சாமிகளில், ஆண் சாமி — பெண் சாமி என்று பிரிக்கப்பட்டிருக்கும் இருவகைச் சாமிகளுக்கும் அடிக்கடி, பூஜைகள் நடத்துவதுண்டாம் ஆடு, கோழி, பன்றி, இவைகளைப் பலியிட்டு பூஜிப்பதே, வழக்கமாம்! அப்போது சிந்தும் இரத்தத்தை 'சாமியின்' பாதத்தில் தேய்த்து, பிறகு வழித்து, நெற்றியில் 'மஞ்சனை' என்று பூசிக்கொண்டால், இந்தச் சில்லரைத் தேவதைகளின் தொல்லையன், மனிதரைத் தொடாதாம். இந்த நம்பிக்கையோடு, அங்கே உலவும் கொடுமைகளைக் குறிப்பிட்டிருந்தார், நமக்கு கடிதம் தீட்டிய தோழர், இந்தத் தெய்வங்களின்மீதுதான் பக்தியும் பரவசமும் கொள்ள வேண்டுமென்கிறார், ஆச்சாரியார்! தென் திருவிதாங்கூரில் இருப்பதுபோன்ற 'சில்லரைச்' சாமிகளின் பட்டியல் எங்கெங்கே எப்படி எப்படியிருக்கிறது என்று ஒரு புள்ளி விபரம் சேகரித்தால் விசித்திரமாயிருக்கும்! ஒவ்வோர் கிராமத்துக்கும், வேடிக்கை வேடிக்கையான தெய்வங்களும், தேவதைகளும் உண்டு. அத்தேவதைகளைப் பூஜிக்க, கிராம மக்கள், நடாத்தும் பலி விழாக்களை நினைத்தால், மனிதனின் ஆதிகால நாகரீகம் கண்முன் ஓடிவரும், இவ்வளவு அநாகரிகமும் சேஷ்டைகளும், நம்மவரை ஆட்டிப்படைக்கின்றன! ஆனால், "விஞ்ஞானப் புதுமைகள் நாட்டில் அதிகமாகவேண்டும்" என்று பிரசங்கம் செய்யும் அன்பர் ஆச்சாரியாரோ, தெய்வ பக்தி பெருக வேண்டுமென்கிறார்!!

★

## தோழர் க. அன்பழகன்

பச்சையப்பன் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் க. அன்பழகன் எம். ஏ., நவம்பர் 1, 2 தேதிகளில் இலங்கை கொழும்பு மருதானை [illegible] ஹால் மண்டபத்தில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில் கலந்துகொண்டு "திருக்குறளும் சங்க நூல்களும்", என்ற தலைப்பில் முதல் நாளும், இரண்டாவது நாள் 'பொருள்' எனும் [illegible] சொற்பொழிவாற்றினார். 3—11—52 காலை கொழும்பு [illegible] கிராண்ட்பாஸ் திராவிட முன்னேற்றக் கழகப் பணிமனையில் அவருக்கு ஓர் வரவேற்பளிக்கப்பட்டது. [illegible] தோழர் க. அன்பழகன், [illegible] பொதுச்செயலாளர் [illegible] யின் படத்தைத் திறந்து [illegible]

## அரசியல் மேதை
# ★ பிளேட்டோ ★
[சேலம் ராஜமாணிக்கம்]

"இறந்து போவதற்குமுன் ஏதென்ஸைப் பார்" என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி. ஏதென்ஸ் நகரம் மிகவும் அழகு வாய்ந்த நகரம். கிரேக்க நாட்டின் தலைநகர். இது சுமார் மூவாயிரம் ஆண்டுகளாகவே புகழ்பெற்று வருகிறது. ஏதென்ஸ், அழகிகளுக்கும் பெயர் போனது. இந்தக் காரணங்களால்தான் அந்தப் பழமொழி ஏற்பட்டிருக்கவேண்டும்! அல்லது சாக்ரடீஸ், பிளாட்டோ, அரிஸ்டாடல் போன்ற அறிஞர்கள் தோன்றிய நகரமாயிற்றே! அதனால் அந்தப் பழமொழி ஏற்பட்டதோ!

சாக்ரடீஸ், ஏதென்ஸ் நகர வீதிகளில் பகுத்தறிவுப் பிரசாரம் செய்த காலத்தில் ஒரு இளைஞர் கூட்டம் எப்பொழுதும் அவரைச் சுற்றி நின்றது, அந்த இளைஞர் கூட்டத்தின் முதல்வன்தான் பிளாட்டோ. சாக்ரடீஸ் எங்கெங்கு போகிறானோ, அங்கெல்லாம் இந்த பிளாட்டோ இருப்பான். இவன்தான் பிற்காலத்தில் சாக்ரடீஸையே உலக மக்கள் மனதிலே உலவவிட்டான். பிளாட்டோ இல்லாதிருந்தால் சாக்ரடீஸைப்பற்றி யாருக்கும் தெரியாது. பிளாட்டோவை மேதாவியாக்கியவன், சாக்ரடீஸ். பிளாட்டோவும் சாக்ரடீஸைப்போல சிந்தனையாளன். இவன் 2300 ஆண்டுகளுக்குமுன்பு எழுதிய நூல்கள் இந்தக் காலத்துக்கும் பொருந்தக் கூடியதாக இருக்கின்றன. இவனது அரசியல் கருத்துப்படிதான் இன்றும் சில நாடுகளில் ஆட்சி நடந்து வருகிறது.

பிளாட்டோ பழமையை வெறுத்துப் புதுமையைப் போற்றினான். ஏதென்ஸில் இப்படிப்பட்ட கருத்துடைய இளைஞர்கள் பலர் இருந்தனர். இவர்கள் பழமையைப் பற்றியும் புதுமையைப்பற்றியும் சரியாக அறிந்துகொள்ளாதவர்கள். என்றாலும், தாங்கள் விரும்பும் புதுமை எங்கு முளைக்கிறதோ அங்கெல்லாம் இவர்களிருந்தனர். இவர்களுடைய விருப்பத்திற்கு சாக்ரடீஸ் வித்தாக இருந்தான். பிளாட்டோ, சாக்ரடீஸை கொள்கை அளவில்மட்டும் தெரிந்துகொள்ளவில்லை. அவனது வாழ்விலும் பங்குகொண்டான். சிறந்த அரசியல்வாதியாக விளங்கவேண்டுமென்று எண்ணங்கொண்ட இவன், தன் நண்பன் சாக்ரடீஸ் மரண தண்டனை பெற்று உயிர்விட்டது குறித்து முடிவில்லாச் சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு அதைப்பற்றித் தன் மனதிலேயே தத்துவ விசாரணை நடத்திப் பார்த்தான். இவன் தத்துவ விசாரணை நடத்திப் பார்க்காமல் அரசியல்வாதியாக இருந்திருந்தால் இவனது ஆழ்ந்த கருத்துகள்கொண்ட நூல்கள் உலகத்துக்குக் கிடைத்திருப்பது சந்தேகமே! சாக்ரடீஸ் பிறரிடம் தர்க்கம் புரிந்தும், உரையாடல் நடத்தியுமே தன் வாழ்நாளைக் கழித்தான். அவன் தன்னைப்பற்றியோ தனது எண்ணத்தைப்பற்றியோ எவ்விதமான குறிப்பும் எழுதிவைக்கவில்லை. சாக்ரடீஸின் முதல் மாணவனாகத் திகழ்ந்தவன் பிளாட்டோ. இவன்தான் சாக்ரடீஸின் கருத்துகளுக்கு உயிர்கொடுத்தவன், சாக்ரடீஸ் ஒவ்வொரு சமயத்திலும் வெளியிட்ட கருத்துகளை மனதில் வாங்கிக்கொண்டு, பிற்காலத்தில் அப்படியே அதை நூல் வடிவில் உருவாக்கினான்.

மனிதர்களைத் திருத்தவேண்டுமானால் கேள்வியும் பதிலுந்தான் நல்ல ஆயுதம் என்று சாக்ரடீஸ் சொல்லிவந்தான். இதைப்பிற்காலத்தில் பிளாட்டோ தனது அறிவைக் கொண்டு தீரயோசித்தான். "சிந்தனை செய்கின்ற எந்த ஒரு தனி மனிதனும் தன்னைத்தானே கேள்வி கேட்டுக்கொள்கிறான். பிறகு அவனே அதற்குப்பதிலும் சொல்லிக்கொள்கிறான். அவன் சிந்தனை செய்து கண்டுபிடித்த பதில் சரிதானா என்று பார்க்கப் பிறரிடம் அதே கேள்வியைப் போட்டு அவர்கள் கொடுக்கும் பதிலை தன் பதிலோடு ஒத்திட்டுப் பார்க்கிறான்."

"அறிவாளிகள் என்று கருதிக்கொண்டிருக்கிறவர்கள் தங்கள் கருத்தை மட்டும் பிறரிடம் சொல்லிவிட்டால் போதாது. விஷயத்தை சரியாகப் புரிந்துகொள்ள முடியாத மக்களிடம் அறிவாளிகள் மிகச் சுலபமாகத் தங்கள் திறமையைக் காட்டிப் புகழ்பெற்றுவிடலாம். இப்படிச் செய்கிற அறிவாளி ஆட்டு மந்தைகளை உற்பத்திசெய்கிறான். அடி தவறாமல் நடக்கக் கற்றுக்கொண்ட சிப்பாய்களை அறிவாளிகள் உற்பத்தி செய்யவேண்டும். அதற்கு, புகுத்தவேண்டிய கருத்துகளை, சுலபத்தில் புரியும்படியான கேள்விகளாக்கவேண்டும். இந்தக் கேள்விகளுக்குப் பதில் அவர்களாகவே கண்டுபிடிக்கப் பழகவேண்டும். இதைச் செய்வதற்குப் சுலபமான வழிகளைக் கண்டுபிடிப்பவனே உண்மையான தத்துவ ஞானி. உண்மை தத்துவ ஞானியும் அதாவது அறிவாளியும் போலி அறிவாளியும் இங்கேதான் தெரிந்துவிடுகிறார்கள். வெறும் புகழுக்காக மட்டும் இருந்துவந்த போலி அறிவாளி ஒரு நூற்றாண்டுக்குள் மறைந்துபோய்விடுகிறான். ஆனால் ஒவ்வொரு விஷயத்தையும் தீர்க்க சிந்தித்து உண்மை கண்ட அறிவாளி உலகமுள்ள காலம் வரையில் மக்களது மனதில் உலவியே திருவான்" என்பது பிளாட்டோ கண்ட உண்மை.

ஏதென்ஸ் நகரத்தில் கி. மு. 427-ம் ஆண்டில் நல்ல செல்வாக்குள்ள குடும்பத்தில் பிளாட்டோ பிறந்தான். இவனது தந்தையின் பெயர் அரிஸ்டோன். தாயாரின் பெயர் பெரிக்டினான். பிளாட்டோவுக்குச் சகோதரர்களும் சகோதரிகளுமிருந்தனர். பிளாட்டோ எழுதிய நூல்களில் தன்னைப்பற்றி அதிகமாகக் குறிப்பிடவே இல்லை. சாக்ரடீஸைப்பற்றி எழுதிவைத்த இவன் தன்னைப்பற்றி எழுதவேயில்லை. பிளாட்டோ சிறந்த கவிஞன்; ஓவியன். இந்தத் தொழில்கள் பிளாட்டோவுக்கு மிகவும் பிடித்தமானவை.

கிரேக்க நாட்டில் அப்போது நடந்த உள்நாட்டுப் போரில் முக்கிய பங்குகொண்டு குதிரைப்படை வீரனாக இருந்து உழைத்தான். போரில் இவன், காட்டிய திறமைக்கு வீரப்பதக்கங்களும் பெற்றான். பிளாட்டோவுக்கு அரசியலில் பங்குகொள்ள அதிக ஆசை என்றாலும் சூழ்நிலை அவனது ஆசை நிறைவேற விட்டுவைக்கவில்லை. ஏதென்ஸில் அப்பொழுது நல்ல செல்வமும், சகலவசதிகளும் கொண்ட இளைஞர்களே அரசியலில் அதிகமாகப் பங்கு கொண்டார்கள். பிளாட்டோவுக்கு அந்தவிதமான வசதிகள் எதுவும் கிடைக்கவில்லை. தவிர அரசியலில் நடந்துவந்த ஊழல்கள் பிளாட்டோவின் எண்ணத்தையே மாற்றிவிட்டன. ஏதென்சில், பெரிகிள்ஸ் என்ற அரசனோடு முடி ஆட்சி முடிந்து முப்பதுபேர்களுடைய ஆட்சி ஆரம்பமாயிற்று.

ஏதென்ஸின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்திய முப்பது பேர்களில் பிளாட்டோவும் ஒருவன். இன்னும் அதில் இவனுடைய சகோதரர்களும், நண்பர்களும் அங்கம் பெற்றிருந்தனர். பிளாட்டோ முப்பது பேர்களில் ஒருவனாக இருந்தானே தவிர, தனக்கு நல்லது என்று பட்டதைச் செய்யமுடியவில்லை. தனக்குக் கெடுதல் என்று தெரிந்ததை செய்வதினின்றும் தடுக்கமுடியவில்லை. இந்த ஆட்சியினர் ஒரு சமயம் சாக்ரட்டீஸ்மீது அடக்குமுறைப் பாணம் பிரயோகித்து பேசக்கூடாது என்று தடுத்தனர்.

முப்பது பேர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஏதென்ஸில் எவ்வளவோ கொடுமைகள் நடந்துவந்தன. அவைகளுக்கெல்லாம்காரணம் சர்வாதிகார மனப்பான்மையோடு ஆட்சிபுரிந்த பிளாட்டோவின் சகபாடிகள்தான். அக்ரமங்கள் செய்துவரும் ஆட்சியில் அங்கம் வகித்துக் கொண்டு அதைப் பார்த்து சகித்துக்கொள்ளமுடியாத பிளேட்டோ அதனின்றும் விலகிவிட்டான். கொஞ்சநாளில் முப்பது பேர்களுடைய ஆட்சியும் முடிவுற்றது.

பிறகு ஏதென்ஸில் ஜனநாயக ஆட்சி தழைத்தது. முப்பது பேர்களுடைய ஆட்சியைக் குறை கூறி வந்தவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். இவர்கள் தங்களை மக்கள் பிரதிநிதிகளென்றும், தங்களது ஆட்சியை ஜனநாயக ஆட்சி என்றும் சொல்லிக்கொண்டனர். ஆனால் இந்த ஜனநாயக ஆட்சி கிரேக்க நாட்டுச்சரித்திரத்திலேயே ரத்தக்கறை உண்டு பண்ணிவிட்டது. இந்த ஜனநாயக ஆட்சியினர் சாக்ரட்டீஸுக்கு மரணதண்டனை கொடுத்துத் தங்களை முட்டாள்கள் என்று காட்டிக் கொண்டனர். இந்த ஜனநாயக ஆட்சியில் நடந்த அக்ரமங்களைப் போல் கிரேக்க நாட்டிலேயே எப்பொழுதும் நடந்ததில்லை. பிளேட்டோ இதனைப் பார்த்துவிட்டு திக்பிரமை பிடித்தவனைப் போலாகிவிட்டான். ஏதென்ஸின் அரசியல் நிர்வாகத்தைப்பற்றி பிளாட்டோ எப்பொழுதும் பெருமைப்படுவதுண்டு. அது இப்பொழுது மாறிவிட்டது. மற்ற நாடுகளிலும் ஜனநாயகம் என்று சொல்லிக்கொண்டு வெளிப்பகட்டுக்கு டமாரமடித்துக் கொண்டு திரிகிறார்கள். ஆனால் அங்கு நடக்கும் அக்ரமங்களை யார் கண்டது? இப்படி இவன் நினைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

சாக்ரட்டீஸின் சுகதுக்கங்களில் பங்குகொண்டு அவரோடு நெருங்கிப்பழகிய நண்பர்களில் பிளாட்டோ மிகவும் முக்கியமானவன். சாக்ரட்டீசுக்கு ஏதென்ஸ் மரண தண்டனை விதித்த பிறகு பிளாட்டோ ஏதென்ஸிலிருக்க விரும்பாமல் இத்தாலி, சிசிலி, எகிப்து முதலிய நாடுகளுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்தான். இதில் பிளாட்டோ சுமார் பன்னிரண்டாண்டுகளைக் கழித்தான். இந்தக் காலங்களில் பிளாட்டோ எவ்வளவோ அனுபவங்களைக் கண்டான். சிசிலியின் ஒரு பகுதியை ஆண்டுவந்த மன்னன், சைரக்யூஸ் (Syracuse) என்ற நகரத்தைத் தலைநகராகக் கொண்டிருந்தான். இந்த நகரத்தில் கிரேக்க பெரும்பாலோர் குடியேறியிருந்தனர். மன்னன் டையோனியஸ் ஒரு மூர்க்கன். மிகவும் கொடுங்கோலாட்சி செலுத்திவந்தான். பிளாட்டோ இதைக்கண்டு மிகவும் வருத்தப்பட்டான். இந்த மன்னனுடைய மைத்துனன் பிளாட்டோவுக்கு நண்பனானான். அவனுடைய பெயர் டயோன் (Dion) மன்னன். இந்த டயோனிடம் சில பொறுப்பான காரியங்களை ஒப்படைத்திருந்தான். பிளேட்டோ இவனுக்குத் தன் கருத்துக்களை எடுத்துச் சொன்னான். டயோனும் அதன்படி நடப்பதாக ஒப்புக்கொண்டான்.

கொஞ்ச காலத்துக்குப்பின் மன்னனுக்கும் பிளாட்டோவுக்கும் நேரடியாக தொடர்பு ஏற்பட்டது. பிளாட்டோ அடிக்கடி ஆட்சியிலுள்ள தீங்குகளை எடுத்துச்சொல்லிவந்தான். தனது ஆட்சியை ஒழிப்பதற்கு மறைமுகமாக வழி ஏதோ பிளாட்டோ செய்வதாகக்கூறிக்குற்றம் சாட்டினான் மன்னன். அந்தச் சமயத்தில் ஸ்பார்ட்டாவிலிருந்து பிரதிநிதி ஒருவன் இந்த மன்னனது சபைக்குவந்திருந்தான். அவனிடம் பிளாட்டோவை ஒப்படைத்து ஸ்பார்ட்டாவில் அடிமையாக விற்றுவிடும்படி ஏற்பாடு செய்தான். கிரேக்கநாட்டில் ஏதென்ஸும் ஸ்பார்ட்டாவும் தனி நகர ஆட்சியுடைய சிறு நாடுகள். இந்த இரண்டுக்கும் அடிக்கடி சண்டைகள் ஏற்படுவதுண்டு. பிளாட்டோ ஏதென்ஸைச் சார்ந்தவன். ஸ்பார்ட்டாவாசிகளுக்குப் பரமவிரோதி. ஸ்பார்ட்டாவோடு ஏதென்ஸ் போரிட்டபோது பிளாட்டோ குதிரைப்படை வீரனாகவுமிருந்திருக்கிறான். ஆகவே விரோதியிடமே பிளாட்டோ ஒப்படைக்கப்பட்டான். அவன் எஜினா என்ற தீவுக்குக் கொண்டுபோய் பிளாட்டோவை அடிமையாகவிற்றுவிட்டான். ஆனால் பிளாட்டோ தக்க சமயத்தில் காப்பாற்றப்பட்டான். வடஆப்பிரிக்காவிலிருந்து எஜினாவுக்கு வந்திருந்த அன்னிசரிஸ் என்ற வியாபாரி பணம் கொடுத்து மீட்டு, பிளாட்டோவை ஏதென்ஸுக்கு அனுப்பிவிட்டான். இது கி. மு. 387-ல் பிளாட்டோ நாற்பது வயதாக இருந்தபோது நடந்த ஒரு சம்பவம்.

ஏதென்ஸுக்குத் திரும்பி வந்த பிளாட்டோ தான் என்ன செய்யவேண்டுமென்பதை வரையறுத்துக் கொண்டான். ஏதென்ஸின் அரசியல் அக்ரமக்காரர்களுக்குப் பதுங்குமிடமாக இருந்தது. ஜனநாயகப் போர்வையில் சர்வாதிகாரிகளும், கொள்ளைக்காரர்களும் உலவினார்கள். ஏதாவது குறை கூறியவர்களுக்கு மரணதண்டனை தரப்பட்டது. ஏதென்ஸில் அப்பொழுது எந்தக் கொள்கையின் அடிப்படையின் மீதும் ஒரு மதமுமில்லை என்றாலும், கடவுளைப்பற்றி அபிப்பிராயம் சொல்லுகிறவர்களை 'கடவுள் நிந்தனைக்காரன்' என்ற குற்றம் சாட்டி விசாரணைக்குக் கொண்டு வந்தார்கள்.

சில நண்பர்கள் பிளாட்டோவை வற்புறுத்தினார்கள், அரசியலில் பங்கெடுத்துக் கொண்டு ஏதென்ஸின் கொடுங்கோலாட்சியை மாற்றியமைக்கும்படி. ஆனால் பிளாட்டோ விரும்பவில்லை. ஏனென்றால் அது வீண் வேலையாகப்பட்டது. எவ்வளவுதான் நல்ல அரசியல் வாதியாக இருந்தாலும் கடவுள் நிந்தனைக்காரன் என்று பெயர் பெற்றவன் ஏதென்ஸின் அரசியலில் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாத நிலை இருந்து வந்தது. இளைஞர் நல்லெண்ணத்தைப் பிளாட்டோ

### பிராமணரல்லாதார் கடமை

பிராமணப் புரோகிதர்களும் பூசாரிகளும், பிராமணரல்லாதார்களுடைய பொருள்களைக் கவருவதற்காகத் தொன்றுதொட்டுச் செய்து வரும் சூழ்ச்சிகளையும், மோசங்களையும், கொலைகளையும், பிற பல தீய சொற்களையும் எடுத்துக் கூறவேண்டும். 'இந்து சமயம்' என்பதன பொய்களையும், புரட்டுக்களையும், ஆபாசங்களையும், அச் சமயப் பெயரால் செய்யப்படும் சடங்குகளின் வாயலாகப் பிராமணரல்லாதார்களின் பொருள்கள் கொள்ளையிடப்படுவதையும், பிராமணரல்லாதார்கள் தாழ்த்தப்படுவதையும், அக் கொள்கைகளினின்றும், தாழ்வினின்றும் பிராமணரல்லாதார்கள் தப்புவதற்குள்ள அவசியத்தையும் வழிகளையும் விளக்கிக் கூறவேண்டும்.

—வ. உ. சிதம்பரனார்
(கப்பலோட்டிய தமிழன்)

பெற்றிருந்தாலும், பழமைவிரும்பிகளும், அதிகார வெறியர்களும் எந்த நல்லசெயலுக்கும் எதிரிகளாக இருந்தனர். அரசியலில் அதிகாரம் பெற்று இதைச்சீர்திருத்தி அமைப்பது என்றால் தன் வாழ்நாளே போதாதென்று எண்ணினான். அப்படி, தன்காலத்தில் மாற்றியமைத்தாலும் ஏதென்ஸின் அடுத்த அதிகார வர்க்கத்தினர் கெடுபிடியாகவே எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றி விடுவார்கள். இது பகைமை உணர்ச்சியை வளர்ப்பதுபோன்றது. இதைவிட வேறுநல்லகாரியம் இருக்கிறது என்ற முடிவுக்கு வந்தான்.

ஏதென்ஸின் மணமே வீசக்கூடாது என்று; ஏதென்ஸின் மதில் சுவருக்கு வெளியில் ஒரு இடத்தை வாங்கி, அங்கே ஒரு கலைக் கழகத்தை ஏற்படுத்தினான். நாட்டின் வருங்கால மக்களின் நல்வாழ்வுக்கு வேண்டிய வழிவகைகளைச் செய்வதே தனது கடமையாகக் கொண்டான். நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்க வேண்டுமானால் முதலில எல்லோரும் ஒழுக்கமாக நடந்து கொள்ள வேண்டும். எவ்வளவுதான் செல்வமிருந்தாலும் செயலாற்றும் தன்மையிருந்தாலும் மனவளம் இல்லை என்றால் அது யாருக்கும், ஒரு பலனையும் தராது. எனவே மனவளம் மக்களுக்கு மிகமிகத் தேவையானது. அதற்கென்றே ஒரு கழகம் ஸ்தாபித்து அதற்கு 'அகாடமி'. (Academy) என்று பெயர் வைத்தான். தன் வாழ் நாள் முழுவதையும்இதற்கே செலவழித்தான். அதில் ஒரு ஆசிரியனாக இருந்து கொண்டு பல நாடுகளிலுமிருந்து வந்த மாணவர்களுக்கு நல்லுரைகள் புகன்றான். பிளாட்டோ இறந்துபோகும்போது ஒரு உயில் எழுதிவைத்துவிட்டுப் போனான். தனக்குப் பின்னும் அந்தக் கழகத்தில் தத்துவ ஆராய்ச்சியே நடைபெறவேண்டுமென்பதுதான் அது.

பிளாட்டோவுக்குப் பின் ஸ்பெயுசிப்பஸ் என்பவன் இந்தக் கழகத்துக்குத் தலைவனாக வந்தான். இவன் பிளாட்டோவின் தங்கை மகன். பிளாட்டோ ஏற்படுத்திய இந்தக் கழகந்தான் உலகத்திலேயே முதன் முதலாக ஸ்தாபிக்கப்பட்ட பல்கலைக் கழகம் என்று போற்றப்படுகிறது. இந்தப் பல்கலைக்கழகம் கி மு. 380லிருந்து கி. பி. 530 வரையில் சுமார் 910 வருஷம்வரை நிலைத்து நின்றது.

பிளாட்டோ கலியாணம் செய்துகொண்டான் என்று அவனது சரித்திரத்தில் எங்குமே காணக்கிடைக்கவில்லை. எனவே, பிளாட்டோ கடைசிவரையில் கலியாணமே செய்துகொள்ளாமல் தத்துவ ஆராய்ச்சியே நடத்தித் தன் வாழ்நாளைக் கழித்தான். மனைவி ஒருவளிருந்தால் அவள் எந்த வேலையும் செய்ய விடமாட்டாள். அவளுக்கு ஆடைகள் வாங்கிக் கொடுக்கவும், அணிகள் செய்து மாட்டவும் அவளோடு கொஞ்சுவதற்குமே மனிதனது வாழ்நாள் இரட்டையாக இருக்கவேண்டும் பின் தனக்குப் பிறக்கும் குழந்தைகளோடு கொஞ்ச வேண்டும். அதற்கு வேறு உணவும் உடையும் தகப்பனாக வந்தவனே தரவேண்டும். இதில் எதையாவது செய்யவில்லை என்றால் மனைவி வேறு கோபித்துக்கொள்வாள். மனைவியோடு கொஞ்சுவதற்கும், அவளோடு சேர்ந்து வருடத்திற்கொரு குழந்தையைப் பெற்றுத் தள்ளுவதற்கும் மனிதன் உலகத்தில் பிறக்கவில்லை. ஒருவன் கலியாணம் செய்துகொள்ளவில்லை என்றால் உலகத்தில் மனித ஜீவராசிகளே தழைக்காது அஸ்தமித்துப் போகுமா? என்று தன்னோடு குதர்க்கம் செய்த நண்பன் ஒருவனுக்குப் பிளாட்டோ சொல்லியிருக்கிறான். இதிலிருந்து பிளாட்டோ திருமணம் செய்துகொள்ள விரும்பவில்லை என்று தெரிகிறது. பிளாட்டோ சிந்தனை செய்வதில் சாக்ரடீசுக்குச் சளைத்தவனல்ல. சாக்ரடீஸ் எதையாவது சிந்திக்காமல் விட்டுச் சென்றானா என்று இவன் ஆராய்ச்சி செய்தான். ஆனால் சாக்ரடீஸ் அந்த வேலையை பிளாட்டோவுக்குக் கொடுக்கவில்லை.

தன் வாழ்நாள் முழுவதும் தன் கழகத்திலேயே இருந்து ஏராளமான நூல்கள் எழுதினான். பிளாட்டோ தனது எண்பதாவது வயதில் கி. மு. 347—ல் இறந்து விட்டான். பிளாட்டோ தனது கலைக்கழகம் எப்படி நடத்தப்பட வேண்டுமென்று உயில் எழுதி வைத்துவிட்டுப் போனானோ அதன்படியே இந்த ஸ்பெயூசிப்பஸ் நடத்தி வந்ததாகும்! அரிஸ்டாடல் என்ற அறிஞன்கூட இந்தக் கழகத்தில்தான் பிளாட்டோவிடம் கல்வி பயின்றான்.

பிளாட்டோ என்ன செய்தான்? என்ற கேள்விக்கு முழுவிடையும் நம்மால் கொடுக்கமுடியவில்லை. என்றாலும், உலகத்தில், மக்களுக்கு அரசியல் அறிவு ஒன்று இருக்கிறது என்று கருதப்படுகின்ற காலம்வரையில் பிளாட்டோவின் சேவை கௌரவிக்கப்பட்டுத்தான் ஆகவேண்டும். அப்படி அவன் என்ன செய்துவிட்டான்? பிளாட்டோ வாழ்ந்தகாலம் கி. மு. 427-க்கும், கி. மு. 347-க்கு மிடையில். அதாவது இரண்டாயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவன். அந்தக் காலத்தில் இவன் எழுதிய நூல்கள் இன்றைக்கும் புதுமைகளாகவே தோன்றுகின்றனவென்றால் அது மிகையாகாது. ஏனென்றால், இன்று பற்பலநாடுகளிலும் தீட்டப்படும் அரசியல் திட்டங்கள் பிளாட்டோவின் அரசியலை மையமாக வைத்தேதான் தீட்டப்படுகின்றன. எப்படியெனில் பிளாட்டோ எந்த ஆட்சியையும் விட்டு வைக்கவில்லை. உலகத்தில் எப்படிப்பட்ட ஆட்சிகள் தோன்ற முடியும்? அங்கே எப்படிப்பட்ட ஆட்சி முறைகளிருக்கும் என்பவைகளை இவன் அப்பொழுதே தனது நூல்களில் வலியுறுத்தியிருக்கிறான். அவைகளில் ஒன்று கூடப் பொய்யாகவில்லை. அதனால்தான் உலகத்தின் அரசியல் மேதைகள் பிளாட்டோவை நாகரீக உலகத்தின் அரசியல் தந்தை என்று அழைக்கின்றனர். ஒருவேளை நம் நாட்டில் அரசியல் வாதிகள் என்று கருதப்படுகிறவர்களுக்கு பிளாட்டோ தெரியமாட்டான். ஏனென்றால் அரசியல் என்பதற்கு அர்த்தமே புரிந்து கொள்ளாதவர்கள் அரசியல் வாதிகளாக இருக்கும்போது பிளாட்டோவைப்பற்றியோ அவனது தத்துவங்களைப்பற்றியோ தெரிந்து கொள்ளவேண்டிய அவசியமென்ன?

பிளாட்டோ நான்குவகை ஆட்சிகளைப்பற்றி சொல்லியிருக்கிறான். முடி-ஆட்சி, சர்வாதிகார ஆட்சி, ஜனநாயக ஆட்சி, பொதுவுடமை ஆட்சி என நான்குவிதமான ஆட்சிகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறான். முதல் மூன்று ஆட்சிகளைத் தன் காலத்திலேயே பார்த்திருக்கிறான். ஏதென்ஸ் முதலில் முடி ஆட்சியுடையதாகத்தானிருந்தது. பிறகு முப்பதுபேர்களுடைய சர்வாதிகார ஆட்சிநடந்தது. இதில் பிளாட்டோவும் ஒருவனாக இருந்தான். அதன்பிறகு ஜனநாயக ஆட்சிமலர்ந்தது. இந்த ஆட்சியையும் பிளேட்டோ கண்முன்பார்த்தான். கடைசியாக பொதுவுடமை ஆட்சியைப்பற்றி சொல்கிறான். எந்த ஒரு நாட்டில அக்ரமங்களும் அநீதிகளும் அதிகம் பெருகுகின்றதோ எந்த நாட்டில் நீதியும் நேர்மையும் நிலைகுலைக்கப்படுகிறதோ அந்த நாட்டில் பொதுவுடமை ஆட்சி பூத்தேதான் தீரும் என்று பிளேட்டோ சொல்லுகிறான். பொதுவுடமை ஆட்சியைக் கடைசியாகச் சொல்லுகிறான். அதாவது அதற்குப்பின் வேறொரு ஆட்சி வரமுடியாது என்பது அவனது சித்தாந்தமாக இருக்கலாம்.

குடி ஆட்சி அல்லது ஜனநாயக ஆட்சியைப்பற்றி மிக நன்றாகச் சொல்லியிருக்கிறான். ஜனநாயக நாட்டில் ஜனங்கள் சுதந்திரமொன்றையே பெரியதாகக் கருதிக் கொண்டு மற்றெல்லா விஷயங்களையும் மறந்துவிடுகிறார்கள். சுதந்திரத்தையே முக்கியமாகக் கருதிக் கொண்டிருக்கிற ஒரு குடி ஆட்சி நாடானது கெட்டவர்களுடைய ஆட்சிக்குட்பட்டு விடுகிறது. இது கொடுங்கோலாட்சியை மக்களாகவே வரவழைத்துக் கொள்வதாகும். மக்கள் தங்களுக்காகப் பரிந்து போரிடுகின்ற ஒருவனைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அவனே தலைவனாகிறான். மக்களே சேர்ந்து கொண்டு அவனைப் பெரிய மனிதனாக்குகிறார்கள். மக்கள் தன் பக்கம் திரண்டு நிற்பதைப் பார்த்து இறுமாப்புக்கொண்டுவிடுகிறான்.

இவன் முதலில் யாரைப்பார்த்தாலும் புன்முறுவல் பூப்பதும், யாரிடத்திலும் மரியாதை காட்டுவதும், அதைச் செய்கிறேன், இதைச் செய்கிறேன் என்று வாக்குறுதி செய்கிறான். மக்கள் செல்வாக்கு அதிகமாக அதிகரிக்கிறது சர்வாதிகாரியாகி, கொடுங்கோலனாக மாறிவிடுகிறான். இவனைச் சுற்றியிருக்கும் நாவலர்களும் பாவலர்களும், கவிஞர்களும், நாடக ஆசிரியர்களும் புகழ்பாடுகின்றனர். ஆக அளவுக்கு மிஞ்சிய ஜனநாயகம், சர்வாதிகாரத்தையும் கொடுங்கோலாட்சியையும் உற்பத்தி செய்கிறது. இதையறிந்துதான் மேல் நாடுகளில் மிதமிஞ்சிய ஜனநாயகத்தை மக்கள் வளரவிடுவதில்லை. உதாரணமாக இங்கிலாந்தில் அண்மையில் நடந்த பொதுத் தேர்தலைப் பார்த்தால் நன்கு விளங்கும். இதன்படி பார்த்தால் நம் நாட்டில் ஜனநாயகம் எப்படித் தவறான பாதையில் செல்லுகிறது என்பது தெரியாமலில்லை.

பொதுவுடமை என்றவுடன் நம் நாட்டவருக்குக் காரல்மார்க்ஸ்தான் ஞாபகத்துக்குவரும். ஆனால் காரல் மார்க்ஸ் தோன்றுவதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பொதுவுடமையைப் பற்றி பிளாட்டோ சொல்லியிருக்கிறான். மார்க்ஸ் கொள்கைப்படி ஒருபொதுவுடமை நாட்டில் எத்தகைய ஆட்சி நிலவும், அதற்கு எப்படிப்பட்ட அரசியல் சட்டதிட்டங்கள் தேவை என்று சிந்தித்து அதற்கேற்ற சட்டங்களை வகுத்திருக்கிறான். சோவியத் நாட்டில் தற்பொழுது நடக்கும் ஆட்சிகூட பிளாட்டோவின் அரசியலை அடிப்படையாகக் கொண்டே நடந்துவருகின்றது என்றே சொல்லலாம்.

பிளாட்டோ தான் வகுத்த அரசியல் திட்டங்களை செயல்முறையில் காட்ட எவ்வளவோ கஷ்டப்பட்டான் நல்ல கொள்கைகள் என்று நாமே சொல்லிக்கொண்டு அவைகளைக் கோபுரத்தின் உச்சியிலிருந்து கூறிவிடுவதால் கொள்கை வெற்றி பெற்றுவிடும் என்று நினைப்பது பைத்தியகாரத்தனம். நல்ல கொள்கைகளையும் திட்டங்களையும் பைத்தியகாரன்கூடத் தீட்டிவிடுவான். ஆனால், அதை அநுஷ்டானத்தில் கொண்டுவரவேண்டுமே? அதற்காகத்தான் இரண்டாவது முறையாக சைரக்யூஸ் சென்றபோது தனது திட்டங்களை அநுஷ்டானத்தில் கொண்டுவர எவ்வளவோ பிரயத்தனப்பட்டான். ஆனால் முடியவில்லை. பிறகு அதற்கான எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை.

கடைசிவரையில் பிளாட்டோ தன் கொள்கைகளிலிருந்து சிறிது கூடத் தவறவில்லை. தன் கொள்கைப்படி தானே நடக்கவில்லை என்றால் பிறரை ஏற்றுக்கொள்ளும்படி சொல்ல என்ன யோக்கியதை இருக்கிறது என்பது பிளாட்டோவின் கருத்து. அரசியல்வாதிகளாக இருக்கிறவர்கள் சுயநலவாதிகளாக இருக்கக்கூடாது என்று வற்புறுத்திக் கூறுகிறான். ஆளுகிறவர்கள் தனியுடைமைவாதிகளாக இருப்பார்களானால் தங்களது குடும்பம், ஜீவனம், சொத்து, சுகம், சுற்றத்தார் முதலியவைகள்பற்றி சிந்திக்க நேரிடுகிறது. அது கவலைக்குக் காரணம். குடும்ப சுகம்பற்றிக் கவலைகொண்ட அரசியல்வாதிகள் ஆட்சியில் அதிக கவனம் செலுத்தமுடியாதவர்களாக இருக்கிறார்கள். அதனால் அரசியல் வாதிகள் பொதுவுடமைவாதிகளாக இருக்கவேண்டும். அவர்களின் சொத்து சொந்தத்துக்கென்று இருக்கக்கூடாது. இப்படிப்பட்ட பொதுவுடமை அரசியல் வாதிகளிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டுமென்கிறான் பிளாட்டோ. சுயநலங் கருதாத பொதுவுடமை வாதிகளிடம் சர்வாதிகாரத்தையும் தாராளமாகக் கொடுக்கலாம் என்று கூறுகிறான்.

வெறும் ஆள் எண்ணிக்கையில் தோன்றும் ஜனநாயகத்தை பிளாட்டோ நம்புவதில்லை. ஆயிரக்கணக்கான ஆடுகளாக இருந்தாலும் ஒரு இடையன் போதும். அவைகளை ஓட்டிக்கொண்டு போய்விடுவான். நூற்றுக்குநூறு மெஜாரட்டிமூலம் தேர்ந்தெடுக்கப்படும்ஜனநாயகவாதி தன்னைத் தேர்ந்தெடுத்த மக்களை ஆட்டுமந்தைக் கூட்டமாக நினைத்துவிடுகிறான். மக்கள் தாங்களாகவே ஆட்டுமந்தைகளோடு போய் சேர்ந்துகொள்கிறார்கள். இப்படிப்பட்ட ஜனநாயகத்தை பிளாட்டோ கிண்டல் செய்கிறான். ஏனென்றால் அப்படிப்பட்ட ஆட்சிகள் கொடுங்கோலாட்சிகளாக மாறுவதற்கு வழி உண்டு. ஏதென்ஸில் இப்படிப்பட்ட ஜனநாயக ஆட்சியில்தான் தன் நண்பன் சாக்ரடீஸ் மரண தண்டனை பெற்றான் என்பதை பிளாட்டோ மறந்துவிடவில்லை. ஆகையினால் தான் மிதமிஞ்சிய ஜனநாயகம் கூடாது என்று பிளாட்டோ கூறுகிறான். இவன் கூறுகின்ற எல்லா விதமான ஆட்சிமுறைகளும் இன்று உலகநாடுகளில் நடைபெற்று வருகின்றன.

★

## தழும்பு

மாணிக்கவேலருக்கு வாலாஜாவில் கருப்புக்கொடி பிடித்த வழக்கு சம்பந்தமாக நம் தோழர் சின்னப்பா 6—11—52 அன்று ஐந்துநாள் சிறைத்தண்டனை அடைந்தார், மாஜிஸ்டிரேட் 10 ரூ அபராதம் கட்டச்சொல்ல தோழர் மறுத்து, சிறைசென்றார்.

## டால்மியாபுரம் போராட்டம்

திருச்சி மாவட்ட தி. மு. கழக செயற்குழு கூட்டம் 16-11-52 ஞாயிறு மாலை 3 மணிக்கு பொதுச் செயலாளர் அண்ணாதுரை முன்னிலையில், முதல் முதலாகக் கூடும். டால்மியாபுரம் போராட்டம் பற்றியோசித்து முடிவு செய்யப்படும். செயற்குழு உறுப்பினர்கள் தவறாது வருகை தர வேண்டுகிறேன்.

அன்பன்,
A. P. தர்மலிங்கம்
செயலாளர்

## 1-ம் பக்க தொடர்ச்சி

ளம் ஓடிவருவதேன்? — தமிழைக் காப்பதாக மார்தட்டும் மாளிகை யதிபர்களின் திருத்தொண்டின் விளைவா, இது! ஒருபோது 'இராமன் ஆண்டாலென்ன—இராவணன் ஆண்டாலென்ன என்று இருந்த மக்களிடம், இன்று 'தமிழ்' என்ற சொல்கேட்டதும் அகத்தில் மகிழ்ச்சியும் முகத்தில் மலர்ச்சியும் ஏற்படக் காரணம் யார்? — ஓடிவருகிறார்கள் மக்கள், தமிழ் போற்ற! மாற்றார் செவிபட, 'வாழ்க தமிழ்' என்று முழக்குகிறார்கள்!! இவ்விதம் வரும் மக்களுக்கு இது போன்ற தமிழ் விழாக்களை ஏற்பாடு செய்வோர் பூமான்களா? அல்ல! சீமான்களா?—அல்ல! அல்ல!! மிக மிகச் சாதாரணமானவர்கள்—'அந்த இடத்து' அகராதிப்படி. ஆனாலும், மக்கள் ஓடிவருகிறார்கள்—கையில் கிடைத்ததைத் தந்து ஒத்துழைக்கிறார்கள். இந்தப் பெருமையை, அடிக்கடி காண்கிறோம் நாம்—அதன் எடுத்துக்காட்டாக ஒற்றைவாடையிலும் காணமுடிந்தது. திருக்குறள் திருவிழாவை ஏற்பாடு செய்தது நண்பர் அன்பழகன் அவர்களும் அவர்தம் தோழர்களும்தான். தேன் விழாவாக மகிழ்ந்தனர் மக்கள்! திரண்டனர்! திளைத்தனர்!!

தமிழை அனுதினமும் போற்றும் பாவலர்கள் பலர், அன்று அங்கே, கலந்துகொண்டு தமது உள்ளத்தை மக்களிடம் ஒப்படைத்தார்கள். உவகைக்கூத்தாட, 'தமிழைக் காப்பீர்!' என்று முழக்கம் எழுப்பினர்கள். "நாங்களும் தமிழ் காப்போர்" — என்று கூறிக்கொள்வதற்காக அல்ல, தாய்மொழியின் சிறப்பை, அரியாசனத்திலிருந்து காணவேண்டுமெனும் ஆசையோடு.

*

'வள்ளுவர் செய்திருக்குறளை
மறுவற் நன்குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி
ஒருகுலத்துக்கோர்நீதி!'

என்று பேராசிரியர் சுந்தரனார் சொல்லியதை நாம் உணர்ந்துவிட்டோம்".

—டாக்டர் மணவாளராமானுஜம்

"வள்ளுவனை உள்ளத்தில் வைத்துப் போற்றவேண்டும்—கோயிலில் வைத்தல்ல"

—டாக்டர் பி. நடராசன்

"பரிமேலழகர் உரை குறளுக்கு முற்றும் பொருந்தியது அல்ல என்பது என் கருத்து. குறள், தனித்தமிழ் நூல். வடமொழிகளிலிருந்து கடன் வாங்கப்பட்டது என்று சிலர் கூறுவதை வன்மையாகக் கண்டிக்கிறேன்"

—டாக்டர் அ. சிதம்பரநாதனர்

"குறள் பொதுமறை. எவருக்கும் உகந்தது. இன்பவாழ்வுதரும் வாழ்க்கை முறைகள் நிறைந்தது"

—நீதிபதி ஹெர்பர்ட்சுந்தரம்

"ஒரு பக்கம் போகபோக்கியம். ஒரு பக்கம் வாழ்வதற்கே இல்லாமல் மக்கள் கஷ்டப்படும் நிலை. கஷ்டப்படுவோர் நிலையை உணர்ந்து 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்ப வேண்டுமென' வள்ளுவர் கூறியபடி நடக்கவேண்டும்......தமிழில் குறள் போன்ற பல இரத்தினங்கள் இன்னும் குப்பையில் கிடக்கின்றன. அவற்றை உலகம் அறியும்படி செய்து அள்ளி வழங்கவேண்டும்"

—ஓமந்தூரார்

"திருவள்ளுவர் நெறி, பொது நெறி. உலக விடுதலை விரும்பினர் அவர். ஆனல், இன்றோ? எங்கும் 'பொருள்! பொருள்!' என்ற ஆசை அதிகரித்துவிட்டது. இது ஒழிந்து பொதுதர்மம் ஏற்பட வள்ளுவர் நெறி உலகமெலாம் பரவும்வகை செய்யவேண்டும்"

—திரு. வி. க.

"காதலின் சிறப்பை இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் நட்பமாக 'யான் நோக்குங்கால் நிலநோக்கும்—நோக்காக்கால் தான் நோக்கி மெல்ல நகும்' என்று கூறிய பெருமை நமது வள்ளுவருக்கே உண்டு."

நாடகப் பேராசிரியர்,
ப. சம்பந்தனர்.

அறம்! பொருள்! இன்பம்!—முப்பால் குறித்தும், முழக்கினர் மூதறிஞர்கள்.

ஏழிசைமன்னர் M. K. தியாகராசபாகவதரின் இன்னிசையோடு துவங்கியது விழா. தமிழ்ப் பேராசிரியர் க. அன்பழகனின் வரவேற்புரைக்குப் பின்னர், அண்ணமலைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் மணவாளராமானுஜம் திருக்குறள் மாநாட்டினைத் துவக்கித்தர, அண்ணமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத்தலைவர், டாக்டர் அ. சிதம்பரநாதனர் தலைமை வகிக்க, சென்னை அரசாங்கப் பொருளாதார ஆலோசகர் டாக்டர் ப. நடராசன், நீதிபதி ஹெர்பர்ட் சுந்தரம், பேராசிரியர் டாக்டர் தேவசேனதிபதி, இரா. நெடுஞ்செழியன், ஆகியோரது அறிவுரைகளுக்குப்பின்னர், வித்துவான் அன்புகணபதி, புலவர் தியாகராசன், இலக்குமணன், ம. த. சந்திரசேகரன், பி. எஸ்: சாம்பசிவம், வேல்முருகன், சரவணன், ஜெயராமன், கோகுல கிருஷ்ணன், கிள்ளிவளவன், இராசமாணிக்கம், 'பிரசண்டவிகடன்' நாரணதுரைக்கண்ணன், பூ. கணேசன், M. A. ஆகியோர் பற்பல தீர்மானங்களைக்கொணர்ந்து நிறைவேற்றியதோடுமாநாடுமுடிவுற்றிருக்கிறது. பிற்பகல், தேவநாதன் இன்னிசையோடு துவங்கிய திருக்குறள் திருவிழாவை ஓமாந்தூர் ராமசாமி துவக்கிவைக்க, அப்பாதுரையார் தலைமைவகிக்க, குறள் நெறிக் கழகத்தை தமிழ்ப்பெரியார் திரு. வி. க. ஆரம்பித்து வைக்க, நாடகப்பேராசிரியர் ப. சம்பந்தனர், வாழ்த்துரை வழங்க, திருக்குறளின் நிலைகுறித்தும் நமது கடமையை உணர்த்தியும் தி. மு. க. பொதுச் செயலாளர் அண்ணதுரை விரிவுரையாற்ற, கலைவாணர் N. S. K. — டி. ஏ. மதுரம் ஆகியோரால் 'வள்ளுவம்' எனும் அரியதோர் ஓரங்கநாடகம் விருந்தாக அமைய, விருந்தின் சிறப்பை விளக்கி உயர்நீதிமன்ற நீதிபதி சோமசுந்தரம் அவர்கள் பாராட்ட, இசையரசு M.M. தண்டபாணி அவர்கள், (இராமநாதபுரம் வேணுகோபால் பிடில், மதராஸ் கண்ணன் மிருதங்கம் ஆகிய பக்க வாத்தியங்களோடு) திருக்குறளின் பெருமையைஉணர்த்தும்பலபாடல்களைத் தமிழிசையில் கலந்து ஊட்ட 9—11—52 அன்று சென்னையில் தமிழோசை முழங்கியிருக்கிறது!

இத்தமிழோசை கேட்கும்படிச் செய்தோரில் நாவலரும் பாவலரும், நாட்டின் நிலைக்காகப் பணிபுரிவோரும், கலந்துகொண்டிருந்திருக்கிறார்களே ஒழிய, சீமான்கள் இல்லை. அமைச்சர்கள் வரவில்லை! 'அவாள்' எவரும் 'நீச பாஷை'யைப் பாராட்டும் கூட்டத்தை நோக்கி கண்களைத் திருப்பவுமில்லை! எனினும், விழா, பெருமையடைந்திருக்கிறது—மக்களின் நல்லாதரவால்.

* * *

வள்ளுவர் வழங்கிய திருக்குறளை தமிழர் சில காலமாக வாழ்த்தத் துவங்கியுள்ளனர். அறத்துப்பாலின் பெருமையையும், பொருட்பால் தரும் விளக்கத்தையும், காமத்துப்பால் தரும் சுவையையும், தமிழர்கள் உள்ளம் குடித்து, கானமயிலென ஆடத் துவங்கியிருக்கிறார்கள்.

பூஜா மாடத்துக்கு மட்டும் என்றிருந்த நிலை மாறி, பொதுமக்களுக்கும் தமிழ் விருந்து படைக்கப்பட்டு வருகிறது.

நாவலரும், பாவலரும் போற்றித் துதித்தால் போதும்!—என்றிருந்த நிலை மாறி, தமிழ், பொதுமக்களின் மன்றத்திலே மணக்கத் துவங்கி விட்டது.

அழகான மான்!—வேடர்களின் பிடியிலே சிக்கி, சுகபோகிக்கு அடிமையாக்கப்பட்டு, அதன் புள்ளியழகை ரசிக்க ஒருவரும், கண்ணை வர்ணிக்க கற்றவர் ஒருவரும், துள்ளிநடைபோடும் அழகைப் பாராட்ட மற்றொருவருமாக இருந்தநிலை மாறி, மான், மக்கள் மன்றத்திலே, துள்ளிவிளையாட ஆரம்பித்துவிட்டது.

ஆலையின் தொழிலாளியும், சாதாரண குடிமகனும் 'தமிழ்! தமிழ்!!' என்று, சங்கநாதம் செய்கிறான்.

அதன் வெற்றிக் காட்சிதான், மறைக்கப்பட்டுக் கிடக்கும் ரத்னங்கள் (ஓமாந்தூரார் சொற்படி) மக்கள் மன்றத்திலே, எடுத்துவைக்கப்படும் கட்டம்.

குப்பையிலே வீசப்பட்ட ரத்னங்கள்! — மணிமண்டபத்துக்கு கொண்டுவரப்படுகின்றன. ஆனல், அந்த ரத்னங்களின் ஒளியையும், அவை தன்னுடையவை என்று கருதும் மனோநிலையையும், மக்கள் யாவரும் எய்தவேண்டும். யாவரும் என்பதை, நாம், அழுத்திக்கூற விரும்புகிறோம்.

தமிழை, மக்கள், விழித்துப் பார்க்கின்றனர்.

'தமிழ் நமது' —என்ற, பேரார்வம் மலர்ந்துவிட்டது.

இந்த விழிப்பும், ஆர்வமும், மக்களின் இதயங்களை திருக்குறள் போன்ற ஒழுக்க நூல்களைப் படிக்கும்படிச் செய்யவேண்டும்.

நாட்டுப்புறங்களில், திருக்குறள் போன்ற பொது மறைகளின் பெருமையை உணர்ந்தோர் மிகமிகக் கொஞ்சம். தி. மு. க. பொதுச் செயலாளர் குறிப்பிட்டதுபோல், கல்லாமை, கற்கச்செய்யாமை, பரவவிடாமை, முதலிய 'ஆமை'களின் உச்சமான 'பொறாமை' விளைவாக, ஒரு சாரரால். நமது இரத்னங்கள் குப்பையிலேயே கிடக்கின்றன.

குப்பைகளை ஒழித்து இரத்னங்களைத் தேடிப் போற்றும், நிலைக்கு தமிழகத்தில், புதுமலர்ச்சி வளர்ந்திருக்கிறது.

சீமான்களின் உல்லாசப் பேச்சிலும், சிங்காரிகளின் அழகை வர்ணிக்கவும், இந்த தமிழ் மலர்ச்சி, கொண்டுபோகப்படாமல், மக்கள் மன்றத்திலே வளர்கிறது—வாகை சூடி வளர்கிறது.

சந்துபொந்து, சாவடி, சாலைகள், குடிசைகள், எங்கும், தமிழ்மணம் கமழ்கிறது—இப்போது, இதனைக் காணும், சப்ரகூடமஞ்சத்து ராஜாக்கள், சல்லடம் கட்டிக்கொண்டு, சங்கநாதம் செய்ய முற்படுகின்றனர்—தாமே இவைகளின் தர்மதாதாக்கள் என்று கூறியவண்ணம்.

விஷயம், மக்கள் மன்றத்தின் கவனத்துக்கு வந்ததும் மக்களின் பார்வையில் நிற்கவிரும்புகிறார்கள்—சல்லாபச் சீமான்கள்.

இந்த லாபவேட்டைக்காரர்களுக்கு சவுக்கடி தருவதுபோல் முன்பு திரு வி. க. கேட்டார், "எவரால், தமிழ் மணம், மக்களிடம் பரவிற்று?" என்று. அதே கேள்வியை எழுப்பி, விடையும் தந்தார், நண்பர் நெடுஞ்செழியன், திருக்குறள் விழாவில்.

நமது பணி, தமிழ் அறிவுக்களஞ்சியங்களை மக்களின் உடமையாக்குவதாகும்.

மக்களின் உடைமையாக்கத்தழும்புகளும் தடியடிகளும் தாங்கிப் புறப்படும் விடுதலைக் கூட்டத்தைப் பார்த்து, கேலிசெய்கிறார்கள்—இத் தாப்பு பேசுகிறார்கள்—சர்க்காரும், அவர்தம் சல்லாபிகளும். சீறும் பாம்பை, காவலன் என்கிறார். பாய்ந்து பிடுங்கும் புலியை, பாசம் காட்டும் 'பரமாத்மா' என்கிறார்! ஆச்சாரியார், தமிழ்காத்தவராம். செட்டிநாட்டரசர், செப்புவதுஇது.

அறம் பொருள் இன்பம் எனும் முப்பொருளை மக்கள் உணரவும், நுகரவும், வேண்டும் உணரச் செய்வதைவிட, நுகரச் செய்வது, புதிய பொறுப்பு — அதிகச் சிறப்பும் கடமையும் நிறைந்த பொறுப்பு.

அந்தப் பொறுப்புகளை ஏற்றுச் செய்ய. பட்டிதொட்டிகளில் தமிழ் கமழ, அறத்தையும் பொருளையும் இன்பத்தையும் அனுபவிக்க, வழிவகை செய்யவேண்டிய ஆட்சியாளரும் அவர்தம் சீமான்களுமோ, அடிப்படைகளைக் குறித்து எண்ணுவதில்லை— அது தமக்கு ஆபத்தைத் தருமென்ற பயத்தால்.

ஆனல், தோள்தட்டி, துந்துபி, முழக்கவும் தவறுவதில்லை—பணம் செலவிட்டு பட்டினத்தில் சிற்சில காரியங்கள் செய்வதுமூலம்.

முத்தமிழ்! முப்பால்!!—இது, மக்களின் சொத்து. முத்தமிழ் பெற, மக்களுக்கு முப்பாலின் பெருமைகள் விளங்கவேண்டும். அறம்சிறக்க பொருள் வேண்டும், பிறகு இன்பம் ஓடிவரும்! இந்த முப்பாலும், சுகபோகிகளின், கூடாரத்திலே, பதுக்கப்பட்டுக் கிடக்கிறது.

அதனை, மக்களுக்குப் பெற்றுத்தரும், விடுதலைப் பணியிலே ஒரு வளமான கட்டம்தான், மொழி ஆர்வம்.

இது வளரவேண்டும்—மக்களின் வீடுகளிலெல்லாம் குடிபுக வேண்டும்—மனதெல்லாம் நிறைய வேண்டும். இந்தத் திருப்பணி இலேசானதல்ல. ஆனல், இதில்தான், வீழ்ந்துபட்ட ஒரு மாபெரும் இனத்தின்; விடுதலை வேகம் பொதிந்து கிடக்கிறது.

இந்த விடுதலை வேகம் ஏந்திப் புறப்படும் இளைஞர்களை— அவர்கள் எக்கட்சியினராயினும் — வாழ்த்துகிறோம். இதற்கு ஒத்துழைப்புத் தரும் தமிழ் அறிஞர்களையும், நாவலர் பாவலரையும் பாராட்டுகிறோம்.

அதே நேரத்தில், நீரோடையைக் கலக்கி 'ஏதாவது அகப்படுமா?' என்று தூண்டில் போடும் ஆசையுடன் துள்ளிவரும் துடுக்குத்தனம் கொண்டோரையும் கண்டிக்கிறோம் இத்திருக்கூட்டம் கெடுத்தது போதும்—இனியாவது ஒதுங்கியிருக்கட்டும்—தமிழ், மக்கள் இதயத்துக்குள் புகுந்துவிட்டது. இனி உமது மாளிகைக்குமட்டும் அது சொந்தமல்ல சொக்குப்பொடியும், கீத மொழியும், தமிழை மயக்கி, உமது சுயநலச் சூறுவளிக்கு இரையாக்கிட முடியாது என்பதையும், 'இடந்தேடிகளுக்கும்', அவரை ஆட்டிப் படைக்கும் 'அந்தப்புர'த்தினருக்கும், அறிவுறுத்துகிறோம்—முப்பால் முழக்கம் ஒலிக்கும் இந்த நேரத்தில்.

## நடக்க இருப்பவை

சிதம்பரம் 17—11—52 திங்கள் மாலை சின்னசெட்டித் தெருவில் பாலகுரு தலைமையில் இரா. நெடுஞ்செழியன் பேசுவார்.

கீழ்மங்கலம் 18—11—52 அன்று மாலை சி. பி. சிற்றரசு பேசுவார்.

மதுரை 16—11—52 ஞாயிறு மாலை என்.வி.நடராசன், எஸ்.முத்து, எஸ். வி. தொந்தி பேசுவர்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.